Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–06 | 20–06–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –123

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-9813)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# அகதிகள் படகு மூழ்கியதில் பலியானோர் 12 பேர் என ஊர்ஜிதம்

## பேசாலையில் சடலங்கள் கரையொதுங்கின

**இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றிவந்த படகு மூழ்கியதில் 12 பேர் பரிதாபமரணமடைந்துள்ளமை ஊர்ஜிதப்படுத் தப்பட்டுள்ளது. இவர்களின் சடலங்கள் பேசாலைப் பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக தெரியவருகிறது. எனினும் இவர்கள் குறித்த விபரம்தெரியவரவில்லை.**

நான்கு தினங்களுக்கு முன் புறப்பட்ட இந்தப் படகு தொடர்பாக இலங்கை திரும்பிய அகதிகள் சிலர் தகவல் வழங்கி யதையடுத்து தேடுதல் நடத்தப்பட்டமை தெரிந்ததே.

இதுதொடர்பாக தெரியவருவதாவது, இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாரை நோக்கிப் புறப்பட்டு வந்து கொண்டிருந்த இலங்கை அகதிகள் 13பேரை ஏற்றி வந்த சிறியபடகு கடலில் ஏற்பட்ட கடும்காற்று காரணமாக மூழ்கியது. இதில் பயணித்த 12பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களின் சடலம் பேசாலைப்பகுதியில் கரையொதுங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. மேலும் அது பொலிசாரின் பிரதேசம் என்பதால் நேரில் சென்று பார்வையிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு இவர்களின் பெயர்விபரம் தெரியவரவில்லை. இவர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என கருதப்படுகிறது. (மி)

-தொண்டமனாறு கடல் நீரேரியில்-

## படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் மீன்பிடித் தொழில் தடைப்பட்டது

(வடமராட்சி)

தொண்டமனாறு கடல்நீரேரி யின் "அக்கரை" கடற்பரப்பில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினையடுத்து கடந்த ஒருவாரத்திற்கு மேலாக அப்பகுதியில் மீன் பிடித் தொழில் தடைப்பட்டுப்போயுள்ளது.இத்தடையினால் தொண்டமனாறுப் பகுதியைச் சேர்ந்த 120 குடும்பங்களைச் சேர்ந்த 250இற்கும் அதிகமான மீனவர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் நீண்ட காலமாக தொண்டமனாறு கடல்நீரேரியிலேயே பாரம்பரிய வீச்சு வலைமூலம் மீன்பிடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் மீது படையதிகாரியால் பொலிஸில் பொய்முறைப்பாடு

படைஉயரதிகாரியொருவரால் கொலைப்பய முறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட வர்த்தகர் ஒருவரை, அவ் வர்த்தகர் தம்மைத் தாக்கியதாக குறித்த படைஅதிகாரியே பொலிஸில் முறைப்பாடு செய்த சம்பவம் ஒன்று பருத்தித்துறைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் இன்பருட்டிப் பகுதியில் மீன் கொள்வனவில் ஈடுபட்டிருந்த வர்த்தகர் ஒருவர் அப்பகுதிப் படையினரது பாவனைக்கு மீன்கொள்வனவு செய்ய வந்திருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் ஒத்துழைப்புடனேயே சமூகவிரோதிகளின் செயற்பாடு தொடர்கிறது

### மட்டு அம்பாறை விசேட தளபதி கேணல் ரமேஸ்

கருணாவுடன் இருந்துவந்தவர்களின் தகவலை அறியும்போது இங்குநடக்கின்ற இந்தச் செயற்பாடுகள் எல்லாம் இராணுவத்துடன் சேர்ந்துசமூகவிரோதிகள் செய்வதாகத் தான் தகவல் கிடைத்துக்கொண்டிருக்கிறது என மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் கூறியுள்ளார்.

செங்கலடி விவசாயப்பண்ணையில் கடந்த வியாழக்கிழமை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை கிரனேட் வீச்சுக்கு இலக்காகிஇருவர் பலி யான சம்பவம் தொடர் பாகத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், அண்மையில் இராணுவத்தினான சந்திப்புகளில் முதல் நடந்த சந்திப் பின்போது இராணுவத்தரப்பில் இருந்து சாந்தகொட்டேகொட கலந்துகொண்டார். அவரிடம் நாங்கள் விளக்கமாக இங்கு நடந்த பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தியிருந்தோம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க கரேஜஸ் கப்பல் கொள்வனவு குறித்து ஒப்பந்தம்

### அடுத்த வாரம் கைச்சாத்தாகும்

அமெரிக்காவினால் சிறிலங்கா கடற்படைக்கு 'கரேஜஸ்' கப்பல் கையளிப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று அடுத்த வாரம் கைச்சாத்திடப் படவுள்ளது.

இக்கைச்சாத்திடல் நிகழ்விற்காக சிறிலங்கா கடற்படைத்தளபதி தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்காவிற்குச் செல்லவுள்ளது. ஒரு மில்லியன் டொலர்கள் பெறுமதியான இக்கப்பல் இலங்கையின் ஆழமான கடற்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக்கூடிய வசதி கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இது அமெரிக்க கரையோரப் பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப் பட்டு பின் ஆறுமில்லியன் டொலர்கள் செலவில் திருத்தியமைகக்கப்பட்டதாகும்.

–மட்டு. முகத்துவாரப்பகுதியில்–

## நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு உபகரணங்கள் தீவைத்து எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலமீன்மடு முகதது வாரப் பகுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இயந்திரப்படகும் மற்றும் பெறுமதி வாய்ந்த மீன்பிடி உபகரணங்களும் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

எரிக்கப்பட்ட படகு,இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா என மட்டக்களப்புப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை படகு எரிக்கப்பட்டமை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற நடவடிக்கைகளை குழப்ப ஆளும்கட்சி திட்டமிடுகிறது

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

பாராளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்ப ஆளும்கட்சி திட்டமிட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.சகல கட்சிகளும் இணைந்து இந்த முயற்சிகளை முறியடிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.நேற்றுக் கண்டியில் இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர் கூட்டத்திலேயே இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலையிலேயே பாராளுமன்றத்தைக் குழப்ப அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகத் தெரிவித்தார். தமது கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான் மையைக் கொண்டிருந்த போதே ஐக்கிய தேசிய முன்னணியரல் தமது அரசாங்கம் கலைக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டிய அவர் சனாதிபதி சந்திரிகா ஹிட்லர் போல செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

## கல்நெரிக்கும் இயந்திரத்தில் சிக்கி குடும்பஸ்தரின் பாதம் சிதைந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கல்நெரிக்கும் இயந்திரத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.இவரது பாதம் நசியுண்டுள்ளது. மேற்படி சம்பவம் நேற்று பி.ப.3.30 மணிக்கு இரணைமடு சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது வீதிபுனரமைப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கல்நெரிக்கும் இயந்திரத்தைக் கடந்து செல்ல முற்பட்ட போது திடீரென பின்நோக்கி இயந்திரம் நகர்ந்தபோது மேற்படி

(12 ஆம் பக்கம் பார்க்க)

-பாராளுமன்றில் தேரர்கள் மீதான வன்முறை-

## மூதூரிலிருந்து கொழும்பிற்கு ஹெல உறுமய பாதயாத்திரை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தமது கட்சியைச் சேர்ந்த தேரர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை மக்களுக்கு வெளிப்படுத்தும் முகமாக ஜாதிக ஹெலஉறும்ய இலங்கை முழுவதும் பாதயாத்திரை நடத்தவுள்ளது. இதன் முதற்கட்டமாக வரும் 28ஆம் திகதி மூதூரிலிருந்து கொழும்பிற்குப் பாதயாத்திரை நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் தமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஆளும் கட்சி பா.உ.கள் மிகமோசமான நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் அதனை மக்களுக்கு வெளிப்படுத்தும் செயற்திட்டமொன்றை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்க ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மறைத்து வைக்கப்பட்டுள்ள இருகிளைமோர் குண்டுகளைத் தேடுகின்றனராம்

### சிறிலங்கா காவல்துறை அறிவிப்பு

கொழும்பில் வீடொன்றில் மேலும் 02கிளைமோர் கண்ணிவெடிகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா காவல்துறை உதவி ஆணையாளர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். கிரான்பாஸ் பகுதியில் இரண்டு தற்கொலை அங்கிகளும், நேற்று முன்தினமிரவு [illegible] மின் நிலையத்துக்கு அருகில் கிளைமோர் குண்டொன்றும் மீட்க[illegible]ள்ள நிலையில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உலக அகதிகள்தினம் இன்று கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு

### எழுச்சிப்பேரணிக்கு ஏற்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சர்வதேச அகதிகள் தினம் இன்று மிகஎழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பெறவுள்ளது.

கிளிநொச்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 5.00மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து எழுச்சிப் பேரணி ஆரம்பமாகி ஏ-9 நெடுஞ்சாலை வழியாக கிளிநொச்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)


# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக கிளிநொச்சியில் கருத்தமர்வு

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று இடம் பெற்றது.

காலை 10.00மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வு சிறுவர் பாதுகாப்பு நிறுவன நிதியுதவியுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.இந்தக் கருத்தமர்வின் நோக்கம் ஆதரவற்ற சிறுவர்கள், வலுக்குன்றிய சிறுவர்கள் வறுமை காரணமாகப் போசாக்கு குறைவான சிறுவர்களை முன்பள்ளி ஆசிரியர்கள் மூலமாக இனம் கண்டு அதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்என்பதாகும்.நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ச.நகுலேஸ்வரனினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இது தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டன. (தீ)

## 45ஆம் நாள் நினைவலைகள்

தாயின்மடியில் 03 12 1978



தாயக மண்ணில் 06 05 2004

### கப்டன் நிதர்சன் / வதனன்

### நடேசன் தர்ம குணாநந்தன்/குணா

06.05.2004 அன்று செங்கலடி மட்டக்களப்பில் தேச விரோதிகளின் சதி வலையின் போது.

[இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் பல்லவனையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்]

எம் குலத்தின் ஒளி விளக்காக
மற்றவர் மனங்களில் வானம்பாடியாக
பாடிப்பறந்திருந்திடும் வேளையில்
எம் இனத்தின் துயர் தீர்க்க
தலைவன் சேனையில் புகுந்த-நீ
துயர் தீரும் வரை மக்கள் மனங்களில்
நிதர்சன (ன்) மாய் வாழ்வாய் என்றும்.


21.06.04 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 45ஆம் நாள் நினைவிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள்,போராளிகள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குரவயல்
உடையார்கட்டு தெற்கு (4724)

தகவல்
நடேசன் குடும்பத்தினர்.

## 05ஆம்ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 04 - 06 - 1977



தாயக மண்ணில் 20 - 06 - 1999

### மேஜர் தமிழ்ச்செல்வன்

### (ரூபசிங்கம் - ராதாரமணன்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

தமிழிற்காய் உயிர்நீந்து மண்ணிற்காய்
அமிழ்தான உடலதனை ஆகுதிசெய்த எம்
இனியனே தமிழ்ச் செல்வா
இதயம் தனில் நிறைந்த ராதா ரமணனே.
ஆண்டு ஐந்து ஓடியதுதான் எனினும் உன்
நினைவு நெஞ்சமதில்
பாடுகின்ற முகாரிக்கு பொருளுண்டு யாரறிவார்.
வாடுகின்றோம் உனை நினைத்து வருவாயா கண்மணியே.

83, திருநகர்,
கிளிநொச்சி. (4613)

குடும்பத்தினர்.

### கச்சாய் புனித பேதுருவானவர் ஆலயக் கொடியேற்றம்

(தென்மராட்சி)

கொடிகாமம் கச்சாயில் அமைந்துள்ள யாத்திரிகத்தலமான புனித பேதுருவானவர் ஆலயக் கொடியேற்றம் இன்று ஆரம்பமாக உள்ளது. காலை 7-30 மணியளவில் யாழ் ஆயர் தலைமையில் திருப்பலியும், தொடர்ந்து 29ம் திகதி வரை வழிபாட்டுடன் கூடிய திருப்பலியுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (28)

### முன்பள்ளி விளையாட்டுவிழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் துரோணர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா கடந்த வியாழனன்று முன்பள்ளி மைதானத்தில் 2.30மணிக்கு இடம்பெற்றது.

விளையாட்டு விழாவில் ஆசியுரையைச் சுதந்திரபுரம் பள்ளி முதல்வர் கனகேஸ்வரன் வழங்கியதைஅடுத்துசிறார்களின் மைதான விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றதையடுத்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வும்நடைபெற்றது. (19)

## வரிவிளம்பரம்

### கதிர்(அமல்) பல், மூக்குக் கண்ணாடியகம்.

கண்பரிசோதித்து பொருத்தமான பிறேம்களில் உடன் கண்ணாடிகளை செய்து பெற்றுக் கொள்ள, பல் கட்டுதல், கிளிப் போடுதல் என்பன உடன்செய்து கொள்ள A-9வீதி, அரசஅதிபர் இல்லம் முன்பாக கிளிநொச்சி. கிளை,பரந்தன் வீதி புதுக்குடி யிருப்பு.

(4718)

### பெயர்மாற்றம்

சின்னையா பரமேஸ்வரி ஆகிய எனது பெயர்21.10.2003ஆம் ஆண்டு தொடக்கம் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனது புதிய பெயர் சின்னையா பிரசாந்தி என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்தகவல்,சி.பிரசாந்தி.

(4612)

### (இறபர்முத்திரை)

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் உடனுக்குடன் செய்து கொள்ளவும் போட்டோ கொப்பி லேமனட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ள. பிள்ளையார் பொத்தக சாலை, கண்டிவீதி கிளிநொச்சி T.P 0212285750 (9823)

### வெளிவந்துவிட்ட தேடலும் தெளிவும்

01.பொதுஅறிவு (தொடர்இதழ் 08) 2004இல் இதழ்02 02.ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி-2004 03.தரம் 05பரீட்சைக்கான கையேடு வினாவிடைகளுடன் 04.கற்பித்தல் கலையில் புதிய தந்திரோபாயங்கள். வன்னியில்-அறிவமுது. (4721)

# கால்நடை, விவசாயக் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையின் கால் நடை, விவசாயக் கண்காட்சி நடத்துவது தொடர்பாக ஒன்று கூடல் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்று கூடல் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கிளி நொச்சி,முல்லைத்தீவு, மன்னார்,யாழ் ஆகியமாவட்டங்களைச் சேர்ந்த சகல கால் நடை வைத்தியர்களும் போதனா ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கால் நடை வைத்தியர்கள், போதனா ஆசிரியர்கள் அனைவருக்கும் யாழ். கால்நடை வைத்திய நிலையத்திலிருந்து 6.30 மணிக்கு வாகனம் புறப்படவுள்ளது. இதில் வடக்கு உதவிப் பணிப்பாளர் பொ.ராமநாதன் வடகிழக்கு கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## ஏலவிற்பனை

**தமிழீழ மருந்துக் களஞ்சியம் - நடுவப்பணிமனை**
**ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு**

பின்வரும் தளபாடங்கள் 23-06-2004 காலை 10.00 மணிக்கு ஏலத்தில்விற்பனை செய்யப்படவுள்ளது. பார்வையிட விரும்புவோர் 23.06.2004 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் 8.30-5.00 மணிவரை மேற்படி நடுவப்பணிமனையில் சமுகமளித்து பார்வையிடலாம்.

*கண்ணாடி சோக்கேஸ் – 09
* மர றாக்கை – 05

பொறுப்பாளர்,
நடுவப்பணிமனை
த.ம.க.

(சி-9132)

## செஞ்சிலுவைச் சங்க அழைப்பு

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

சொக்கநாதன் பேரம்பலம் [வட்டக்கச்சி], சுகுணராஜா ராஜேஸ்வரி [இல.95 கண்ணகிபுரம் அக்கராயன்], ஜோ.முனீசுவரி [கச்சேரி அருகில் கிளிநொச்சி], கணேஸ் தனபாய்க்கியம் [அகிலன்வீதி உதயநகர் கிளிநொச்சி], அஜந்தன் [புளியம்பொக்கணை சந்தி புளியம்பொக்கணை], சிவராஜா கமலா [பாலர் பாடசாலை அருகில் கண்ணகிபுரம் அக்கராயன்], வீராசாமி மகேஸ்வரி [ஐயனார் களஞ்சியம் 8ஆம் கட்டை அக்கராயன்], மகேந்திரன் விஜயராணி [சுஜிபா களஞ்சியம் தேவாலயம் அருகில் 8ஆம் கட்டை அக்கராயன்], திருமதி சுகுமார் [மாயவனூர் வட்டக்கச்சி], திருமதி செல்வராஜா [இல. 14 புதுக்காடு முகாம் இராமநாதபுரம் வட்டக்கச்சி], நடராஜா சாந்தி [புனித கன்னியர் மடம் 8ஆம் கட்டை அக்கராயன்], வசந்துகுமார் பரமேஸ்வரி [ஊற்றுப்புலம் கோணாவில்], செல்வரட்ணம் மனோகரன் [சிவன்வீதி சிவநகர் கிளிநொச்சி] ஆறுமுகம் சுரேஸ் [40 வீட்டுத்திட்டம் 14ஆம் வாய்க்கால் ஐயன்கன்குளம்] கணேஸ் ஜெயலட்சுமி [8ஆம் கட்டை அக்கராயன்], கதிர்காமநாதர் லலிதாதேவி [மே.பா.தர்மலிங்கம் இல.483 திருநகர் மல்லாவி], தம்பிராசா [1ஆம் கட்டை தேவாலயம் அருகில் பொன்னகர்], தயாளகுணம் சாந்துகுமாரி [மணியன்குளம் அக்கராயன்] முருகையா கனகநாயகம் [சுபாஸ் குடியிருப்பு அக்கராயன்], வசந்தி அந்தோனியம்மா [இல.05 2ஆம் பாடசாலை ஒழுங்கை மணியன்குளம் அக்கராயன்], க.சுறாங்கனி [மீனவர் சங்கம் சாந்தசோலை இரணைமடு], பகீரதி [கண்ணன் ஆலயம் அருகில் மணியன்குளம் அக்கராயன்], கந்தையா சிவமோகன் [8ஆம் கட்டை இம்மாஸ் நகர் அக்கராயன்], மரியசூசைநாதன் [இல.136 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி], வசந்துமாரி [பேக்கரி ஒழுங்கை ஊற்றுப்புலம்], சின்னையா சந்திரா [8ஆம் கட்டை இம்மாஸ் நகர் அக்கராயன்], சரோஜா [தும்பி குடியிருப்பு 8ஆம் கட்டை அக்கராயன்], மனோகரன் [அம்பாள் புகைப்பட நிலையம் கிளிநொச்சி], லட்சுமி [மரப்பாலம் அருகில் கோணாவில்], இரவீந்திரன் திருமேனி [யு2 யு.என்.எச்.சி.ஆர் முகாம் தட்சணாமருதமடு.]

(4609)

# வீரவணக்கம்

## 03 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

தாயின் மடியில் 19 - 08 - 1965



தாயக மண்ணில் 20 - 06 - 2001

தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்

### க.கிருஸ்ணசாமி

நி.மு. கண்டி மாவட்டம்

த.மு. இல. 413, குறுக்கு ஒழுங்கைஜெயபுரம்

20.06.2001 அன்று மணலாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார்.

இம்மாவீரர்களுக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## 02 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

தாயின் மடியில் 02 - 05 - 1971



தாயக மண்ணில் 20 - 06 - 2002

தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்

### நா.குமார்

நி.மு. ஜீவநகர் இடதுகரை

முத்துஐயன்கட்டு.

20.06.2002 அன்று ஆனந்தர்புளியங்குளம் பகுதியில் தவறுதலாக ஏற்பட்டவெடிவிபத்தின்போது வீரச்சாவடைந்தார்.

'தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணியினர்'

(4723)

# அமெரிக்க பணயக் கைதி கொலை தீவிரவாதிகளுக்கு அமெ.எச்சரிக்கை

(றியாத்)

**சவுதி அரேபியாவில் அல்-ஹைதா தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்கப் பொறியியலாளரான போல் ஜோன்சன் கொடூரமான முறையில் தலைதுண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.நேற்று முன்தினம் நடந்துள்ள இச்சம்பவத்தையடுத்து தீவிரவாதிகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அமெரிக்க இராணுவத்தின் அப் பாச்சி ரக உலங்கு வானூர்திகளில் அதிநவீன வீடியோ கமிராக்களைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டு வந்தவர் அமெரிக்கரான போல் ஜோன்சன்.

இவரை சவுதி அரேபியாவைச் சேர்ந்த அல்-ஹைதா தீவிரவாதிகள் கடந்த வாரம் கடத்திச் சென்றிருந்தனர். இவரை விடுவிக்க வேண்டுமானால் சவுதி அரேபிய சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அல்-ஹைதா தீவிரவாதிகளை வெள்ளிக்கிழமை இரவுக்குள் விடுதலை செய்ய வேண்டும். இல்லையேல் அமெரிக்கர் கொல்லப்படுவர் என்று எச்சரிக்கை செய்திருந்தனர்.

ஆனால் சவுதி அரேபிய தீவிரவாதிகளை விடுதலை செய்யத் தவறியதையடுத்து நேற்று முன்தினம் இரவு அமெரிக்கரான போல் ஜோன்சன் தலை துண்டிக்கப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

போல் ஜோன்சன் கொலை செய்யப்பட்டுள்ளமை அமெரிக்காவில் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான செயல்களைப் புரியும் தீவிரவாதிகளுக்குப் சரியான பாடம் கற்பிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

நேற்றுக் காலை செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் இவ்வாறான கொடூரமான நடவடிக்கைகள் இனிநடக்காது அமெரிக்க உரிய நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளார்.

இதேவேளை வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கர்களிடையே இச்சம்பவம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கரின் கொடூர கொலைக்கு மனித உரிமை அமைப்புக்களும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

## 18பேர் பலி

நேபாளத்தில் மாவோஸ் போராளிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் படையினர் உட்பட 18பேர் உயிரிழந்துள்ளனர். ரோந்து சென்ற படையினரை இலக்குவைத்தே இத்தாக்குதல் இடம்பெற்றது.

## போல் ஜோன்சனின் கொலையால் அமெ.நடவடிக்கையை நிறுத்தமுடியாது

### சனாதிபதி புஷ் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க பொறியியலாளர் அல்-ஹைதா தீவிரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவின் நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தச் செய்யுமென அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தீவிரவாதிகளின் கொடூர செயல்களினால் அமெரிக்காவின் நடவடிக்கையை நிறுத்த முடியாதென அவர் தெரிவித்துள்ளார். இது ஓர் ஈவிரக்கமற்ற செயல் எனவும் இப்படுகொலையை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதெனத் தெரிவித்துள்ளார்.

போல் ஜோன்சன் கழுத்து வெட்டப்பட்டு படுகொலை செய் யப்பட்ட சம்பவம் தொடர்பாக புஷ் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அல்-ஹைதாவின் முக்கிய தலைவர் உட்பட மூவர் படையினரால் சுட்டுக்கொலை

(றியாத்)

சவுதி அரேபியாவில் முக்கிய அல்-ஹைதாத் தலைவர் அப்துல் அசீஸ் அல்முகதீஸ் உட்பட மூன்று பேரை நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

அமெரிக்க பொறியியலாளர் போல் ஜோன்சன் அல்-ஹைதா தீவிரவாதிகளால் அண்மையில் கடத்திச் செல்லப்பட்டு நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதென சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

றியாத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது அல்ஹைதா உறுப்பினர்கள் மூவரும் கொல்லப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் அமெரிக்கப் பொறியியலாளர் போல் ஜோன்சனும், சவுதியில் ஏனைய மேற்கு நாட்டவர்களும் கொலை செய்யப்பட்டமைக்கு நாமே பொறுப்பென அப்துல் அசீஸ் உரிமை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை சவுதியில் தேடப்பட்ட பாரிய தேடுதலின் போது மற்று மோர அல்-ஹைதா தீவிரவாதி கைது செய்யப்பட்டுள்ளதாக அல் அரேபிய தொலைக் காட்சி தெரிவித்துள்ளது. கொலை செய்யப்பட்ட அமெரிக்க பொறியியலாளரின் சடலத்தை எரிப்பதற்கு முயற்சித்த வேளையே அப்துல் அசீசும் ஏனை யோரும் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



சவுதிப் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட அல் அராபிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட அல்ஹைதா தலைவர்களில் ஒருவரான அப்துல்லசிஸ் அல்மொறின் மத்தியிலும், றாகன் அல்சகிள் இடது பக்கத்திலும்; அடையாளம் தெரியாத ஆயுததாரர் வலது பக்கத்திலும் காணப்படுகின்றனர்.

## அமெ.படைத்தளம் மீதுதாக்குதல் சிப்பாய் பலி ஒப்பந்தக்காரர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள அமெரிக்கப் படைத்தளம் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் அமெரிக்க வீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் வெளிநாட்டு ஒப்பந்தகாரர் ஒருவர் காயமடைந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.



கபாவை விட்டு வெளியேறும். போர்வீரர்களிற்கு கையசைக்கும் மெக்டி இராணுவ ஆதரவாளர்கள்



சீனாவின் குவான்டொங் மாகாணத்தில் இடம்பெறும் படகோட்டப்போட்டி

## போதைப்பொருள் கடத்திய அறுவருக்கு வியட்நாமிய நீதிமன்று மரணதண்டனை

வியட்நாம் நீதிமன்றம் நேற்று முன்தினம் போதைப்பொருள் கடத்திய 06 பேரிற்கு மரண தண்டனை விதித்துள்ளதுடன் 03 பேரிற்கு ஆயுட் காலச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இவர்கள் கம்போடியாவிலிருந்து வியட்நாமிற்கு 16 இலட்சம் டொலர் பெறுமதியான ஹெரோயினையும் போதைப்பொருள் மருந்துகளையும் (குளுசை) கடத்திய குற்றச்சாட்டில் இத் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இக்கடத்தலுடன் தொடர்புடைய வேறொருவருக்கு ஆறு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தற் காரர்கள் அனைவரும் வியட்நாம் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.



தெற்கு நறினோ நாட்டில் போதைப்பொருள் உற்பத்தி செய்யும் கிராமம் ஒன்றில் போதைப்பொருள் தடுப்புப் பொலிசார் உலங்கு வானூர்தி மூலம் தரையிறக்கப்படுகின்றனர்.



இடதுசாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆர்ப்பாட்டத்தின்போது எதிர்ப்பாளர் ஒருவர் கலகம் அடக்கும் பொலிசாரினால் தடுக்கப்படுகிறார்.

## ஐ.யூனியனின் செயற்கைக்கோள் இந்தியாவில் வைத்து ஏவப்படும்

(லண்டன்)

ஐரோப்பிய யூனியனின் செயற்கைக் கோள்களை ரொக்கட் மூலம் விண்ணில் செலுத்தும் ஒப்பந்தத்தை இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் செய்து கொண்டுள்ளன. இதனை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய மாதவன் நாயர், செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதில் புதிய சாதனை படைத்துள்ள இஸ்ரோ, அதனை வர்த்தக ரீதியில் பயன்படுத்த முடிவு செய்துள்ளது என்று கூறியுள்ளார்.

# அமைதி, சமாதானம் எனப் பேச ஆரம்பித்து 2 ஆண்டுகளாகியும் அகதி வாழ்வு தொடர்கிறது

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிக்கை

(கிளிநொச்சி)

நாட்டில் அமைதி, சமாதானம் என்று பேசத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இன்றுவரை எந்தவித உருப்படியான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படாத நிலையால் அகதி வாழ்வு தொடர்கிறது. இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூன் - 20 சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யூன் 20 சர்வதேச அகதிகள் தினம் போர், பொருளாதார நெருக்கடிகள், இயற்கை அனர்த்தம் ஆகியவற்றால் நிர்க்கதியாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட இனம் தமக்கு விடிவு வேண்டி ஓர் குரலில் உரக்கக் குரல் கொடுக்கும் நாள்தான் யூன் - 20.

கால் நூற்றாண்டு காலமாக இடம்பெற்ற போரினால் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டு, வாழ்விடங்களை விட்டு விரட்டப்பட்ட தமிழ் மக்களது ஆழ்மன வேதனைகளை உலகின் மனச்சாட்சிகளிற்கு ஒப்புவிக்கும் நாள் யூன் - 20.

உலகில் எங்கெங்கெல்லாம் அகதிகள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் அகதிகளாக்கப்பட்ட சமூகங்களின் ஏகோபித்த குரல்கள் உலகின் மனிதாபிமான அமைப்புக்கள், ஐ.நா.உயர்ஸ்தானிகராலயங்கள் முன்றலில் வருடந்தோறும் ஓங்கி ஒலிக்கத்தான் செய்கின்றன.

ஆயினும் துன்ப துயரங்களால் துவண்டு போயுள்ள இனத்தின் கண்ணீரும், கதறல் ஒலிகளும் அகன்ற பாடின்றி உலகில் இன்றும் தொடர்கதையாகவே அகதிகள் வாழ்வு வதையுறுகின்றது. இதில் எமது தாயகத்தில் வாழ் மக்களும் சதா நிம்மதியின்றி அலையும் மக்கள் கூட்டமாக அமைதியிழந்து வாழ்கின்றனர்.

தமிழரின் பூர்வீகக் குடிநிலங்கள் இராணுவ முகாம்களாக்கப்பட்டுள்ளன. அதேவேளை நிரந்தரக் குடியிருப்பாளர்கள் நிரந்தர அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் அமைதி சமாதானம் என்று பேசத் தொடங்கி 02 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் சொந்த மண்ணுக்கு, வீட்டுக்குத் திரும்ப முடியாத மக்களாக எமது மக்கள் அல்லலுறுகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் போர்க் கால வாழ்வில் இருந்து பெருமளவில் மாற்றம் ஏற்பட்டதாக இல்லை. மர நிழல்களிலும், குடிசைகளிலும், அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் அவல வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களின் நிலை இன்றும் தொடர்கின்றது. அகதிகளாக்கப்பட்ட மக்களிற்கு உதவுமாறு மக்களாலும், மக்கள் சார்பாகவும் பல தரப்பினரிடமும் பல தடவைகள் கோரிக்கைகள் விடப்பட்டன. இன்றுவரை எந்தவித உருப்படியான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படாத நிலையால் அகதிகள் வாழ்வு தொடர்கின்றது.

காலம் காலமாக வாழ்ந்த ஊர்முற்றங்களில் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியாது தவிக்கும் மக்களின் உளப்பொருமலை உலகிற்கு உணர்த்த உதவுமாறு மக்கள் அமைப்புக்கள் எம்மைக் கேட்டு வருகின்றன.

மக்கள் வாழ்விடங்களில், வணக்கத் தலங்களில், பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படைகள் அகன்று மக்கள் மீள்குடியமர்வதற்கு வழிபிறக்கச் செய்வதே உலகின் மனச்சாட்சிகளிற்கும், மனிதாபிமான ஐ.நா. அமைப்புகளிற்கும் உள்ள தார்மீகப் பொறுப்பாகும். "அகதிகள்" என்ற பெயரகற்றி அனைவருக்கும் புகலிடங்கள் வழங்கி சுபீட்சமான எதிர்காலம் மலர ஏங்கும் மக்கள் இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசங்களில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும், அகதிகள் என்ற நிலை நீங்கி வாழ்வில் ஒளிபெற வழிபிறக்க வேண்டும்.

யூன் - 20 சர்வதேச அகதிகள் தினத்தில் இடம்பெயர்ந்து இடர் சுமந்து வாழும் மக்களுடன் சேர்ந்து அவர்கள் சுமைகளை, சோகங்களை நாமும் பங்கேற்கின்றோம். இந்நிலையில், மனிதாபிமான அமைப்புக்கள் ஐ.நா. உயர் ஸ்தானிகாரலயங்களின் தலைமைப் பணியகங்கள் முன்சென்று எமது மக்கள் மீண்டும் முறையிட உள்ளனர். இதற்கு உள்ளூர் நிறுவனங்கள் தமது பங்களிப்பினையும், ஒத்துழைப்பினையும் வழங்குவதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தமது உதவிகளைச் செய்யும்.

அதேநேரம், இடம்பெயர் வாழ்வை நீக்குவதற்கு சர்வதேச நிறுவனங்கள் காட்டும் முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் கைகோர்த்து செயற்படத் தயாராக உள்ளது என்பதனை இந்நாளில் உறுதிபடக் கூறுகின்றோம்.

### கணினி வழங்கல்

முல்லை. மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கென முல்லை. மாவட்ட அரச அதிபரினால் நன்கொடையாக மின்பிறப்பாக்கி, கணினி, பிறின்ரர் தொகுதி கடந்த 14ஆம் திகதியன்று சமாச மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## முல்லைத்தீவில் மணல் ஏற்ற பிரதேச சபையின் அனுமதி தேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மணல்,களி, கல்லு,கிரவல் என்பன ஏற்றுவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் அனுமதி பெற்ற பின்பே ஏற்றவேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரச திணைக்களங்கள் கிரவல் ஏற்றுவதற்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

அனுமதி எடுக்காது குறிப்பிட்ட பொருட்களை ஏற்றுவது கண்டுபிடிக்கப்பட்டால் கரைதுறைப்பற்று பிரதேச சபையினராலும், காவல் துறையினராலும் நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு பிரதேச சபைச் செயலர் கேட்டுக்கொள்கின்றார். (20)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி உதவி அரசாங்க அதிபர் செயலகத்தில் கடந்த 16ஆம் திகதி ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒன்று செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாக உத்தியோகத்தர் இ.இராஜன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நிவாரண விநியோகத்தைச் சீரமைத்தல், ஒன்றிணைந்த உதவித் திட்டத்தின் கீழ் 25,000 ரூபா வழங்குவதற்கான நடவடிக்கை, பூநகரி - குமுழமுனைப் பிரதேசத்தில் கால்நடைகள் திருடப்படுவதைத் தடுப்பதற்கான முன்னோடிச் செயற்பாடுகள், கௌதாரிமுனையில் மாதத்தில் 3ஆவது வியாழன் நடமாடும் சிகிச்சை நிலையம் ஒன்றைச் செயற்படுத்தல், பூநகரி - வில்லடி அ.த.க.பாடசாலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தைத் திறந்து வைப்பதுடன் பாடசாலைக்கு ஒரு அதிபரை நியமித்தல், இந்திய வம்சாவளி மக்களிற்கு குடியுரிமை வழங்குவதற்கான முன்னோடி நடவடிக்கைகள், இதற்கான முன்னாய்வுக் கூட்டம் 22-06-2004இல் நடத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வீதிபுனரமைப்பு வேலைகள் ஆரம்பம், தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 25 பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவு தொகை வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. இதில் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (15)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 22,871 வீடுகள் அமைக்க முடிவு

வடக்கு-கிழக்கு வீடமைப்புப் புனர்நிர்மாணத்திட்டத்தில் முல்லை மாவட்டத்தில் 22,871வீடுகள் அமைக்கப்படவுள்ளன. தற்போது 3800 வீடுகள் அமைப்பதற்கான நிதி வந்துள்ளது.

ஒரு வீட்டிற்கு 1இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைகள் முடிவடையாத கல்வீடுகளில் 786 வீடுகளுககான வேலைகளும் நடைபெறவுள்ளதாக முல்லை. மாவட்டத் தமிழீழ நிர்வாக சேவையின் நிர்வாக அலுவலர் பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார்.(20)

## வட-கிழக்கில் கண்ணிவெடியகற்ற ஜப்பான் 2.5 மில்லியன் டொலர் உதவி

வட-கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சிறிலங்காவிற்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோசூடா விற்கும் கண்ணிவெடிகளை அகற்றும் நான்கு நிறுவனங்களுக்குமிடையே இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யூலை-12 முதல் 18ஆம் திகதி வரை

## யாழ்.இல் உள்ளூராட்சி வாரத்தை சிறப்பாக முன்னெடுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடெங்கும் உள்ளூராட்சி வாரத்தை மிகச் சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கு யாழ்.மாநகரசபை மற்றும் பிரதேசசபை உட்பட உள்ளூராட்சித் திணைகளங்களால் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் யாழ்.குடா நாட்டின் பல பாகங்களிலும் சிரமதானம் உட்படப் பல சுகாதார நலன் பேணும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (33)

## சாவகச்சேரி மருத்துவமனை

## வெளிநோயாளரின் அவலம் நீங்க உடன்நடவடிக்கை எடுக்கக்கோரல்

(தென்மராட்சி)

தென்மராட்சி தலைமை மருத்துவமனையான சாவகச்சேரி வைத்தியசாலை, போதிய இடவசதியின்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறது.

நாள் ஒன்றுக்கு சராசரியாக நானூறில் இருந்து ஐந்நூறு வெளிநோயாளிகள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இவர்கள் நிற்பதற்கோ, இருப்பதற்கோ இடவசதிகள் இல்லாமையினால் மணிக்கணக்கில் வெளியிலே வெயிலில் நிற்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் மயங்கி விழும் சம்பவங்களும் நிகழ்கின்றன.

இது குறித்துக் கவலை தெரிவித்த மருத்துவமனையின் தலைமை மருத்துவர் அம்பிகைபாகன் இவ்விடயத்தை அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் கவனத்திற்குக்கொண்டு சென்றிருப்பதாகவும் தொண்டு உள்ளம் படைத்தவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (28)

### இன்று பயணம்

உலக வங்கி நிதியுதவியுடன் 50 வீடுகள் கட்டுவதற்கான வேலைத் திட்டம் தொடங்கப்படவுள்ளது. மட்டுவில் மத்தி, கோயிலாக்கண்டியில் தலா 25 வீடுகள் கட்டப்படவுள்ளன. இதற்காக சாவகச்சேரி பிரதேச செயலர் தலைமையிலான குழு இன்று கம்பஹா யாகெலவில் அமைந்துள்ள மாதிரி வீடுகளைப் பார்வையிடச் செல்லவுள்ளது. (28)

## மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இன்று சமகால அரசியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுவரும் சமகால அரசியற் கருத்தரங்கு இன்று மானிப்பாயில் இடம்பெறவுள்ளது.

மாலை 3. 30 மணியளவில் யாழ். மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இக்கருத்தரங்கில் பல அரசியல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

இதில் சிறிலங்கா அரசின் அரசியல் நிலைப்பாடுகள், ஈழத்தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேசத்தின் நிலைப்பாடுகள், இது குறித்து மக்கள் கொண்டிருக்க வேண்டிய விழிப்புணர்வுகள் என்பன குறித்துத் தெளிவுபடுத்தவுள்ளனர். (33)

## டெங்குக் காய்ச்சலை உருவாக்கும் நுளம்புகளை அழிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் டெங்குக்காய்ச்சலைப் பரப்பக் கூடிய நுளம்புகளை அழிக்கும்நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

கொடிய உயிர்கொல்லி நோயான டெங்குக் காய்ச்சலை யாழ்.குடாநாட்டில் பரவவிடாது தடுக்கும் நோக்குடன் இது மேற்கொள்ளப்படவுள்ளது.

இத் துரித நடவடிக்கையில் யாழ்.குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள சுகாதாரசேவை உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கமைய டெங்கு நோயைப்பரப்பக் கூடிய நுளம்புகள் பெருகும் இடங்களை இனம்கண்டு அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (33)

# ஐக்கியம், ஒருமைப்பாட்டிற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு?

இனப்பிரச்சினைக்குப் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பனவற்றிற்குள் உட்பட்டதாகவே அரசியற்தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பது சர்வதேச சமூகத்தில் குறிப்பாக, இலங்கை இனப்பிரச்சினையில் செல்வாக்குச் செலுத்த முனையும் ஒரு தரப்பு நாடுகளின் நிலைப்பாடாகும். இதனை அவர்கள் அடிக்கடி வலியுறுத்தியும் வருகின்றனர்.

ஆனால், இன்று தமிழ் மக்களிடம் உள்ள பிரதான கேள்வியானது இலங்கை அரசிற்கு உட்பட்டதான பிரதேச ஐக்கியம், ஒருமைப்பாடு என்பனவற்றைப் பேணும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முடியுமா? அதாவது, இத்தகைய தொரு தீர்வைக் கொண்டுவர இதனை வலியுறுத்திவரும் சர்வதேச நாடுகளினால் முடியுமா? என்பதே ஆகும்.

விடுதலைப்புலிகள்தரப்பில் கடந்த மூன்று வருடங்களாக சமாதான முயற்சிகளுக்குச் சாதகமான வகையில் பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. இதனை இனப்பிரச்சினை விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள - அதாவது, சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வரும், ஈடுபாடு கொண்டுள்ள எவருமே, எந்த நாடுமே நிராகரித்துவிட முடியாது.

ஏனெனில், விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பைப் பூரணமாகவே வழங்கி வருகின்றது. அரச படைத் தரப்புப் பெரும் யுத்த நிறுத்த மீறல்களைச் செய்துள்ளபோதும், விடுதலைப் புலிகள் பலரின் எதிர்பார்ப்பையும் மீறிய அதில் பொறுமை காத்துள்ளனர் என்பதை எவருமே மறுக்க முடியாது.

அத்தோடு, அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை முறித்துக் கொள்வதற்கான நியாயப் பாடானகாரணிகளை வழங்கியபோதும், விடுதலைப்புலிகள் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளனர்.

ஆனால், கடந்த இரண்டரை ஆண்டு காலப் பகுதியில் சமாதான முயற்சிகளில் காணப்பட்ட முன்னேற்றம் என்ன? இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பான விவகாரத்தில் நம்பிக்கை வைக்கக் கூடியதாக ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிப்பதென்பது கடினமே.

யுத்த நிறுத்தம் அமுலாகி இரண்டரையாண்டு கடந்துவிட்டபோதும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுப் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் வந்து சேரவில்லை. இதன் காரணமாக யுத்த சூழ்நிலையில் இருந்து பெரும் மாற்றம் எதையும் கொண்டதாக அவர்களின் வாழ்க்கை நிலை மாறவில்லை.

இதேவேளை, தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டிலும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அதாவது, பேச்சுவார்த்தை மேசைக்கு வெளியில் இருந்து கூடத் தீர்வொன்றைக் காண்பதற்கான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதையும் மேற்கொண்டதாக இல்லை.

மாறாக, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக விடுதலைப்புலிகள் வைத்த நகல்திட்டத்திற்கு எதிர்ப்புணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றதே ஒழிய வேறு எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக இல்லை. அதிலும் குறிபபாகத் தற்போதைய அரசியல் சூழ்நிலையானதுசிறிலங்கா அரசாங்கத்தினால் முன்னேற்றகரமான தீர்வொன்றை எட்ட முடியுமா? என்ற கேள்வியையே எழ வைக்கின்றது.

சிறிலங்காவில் தற்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலையில், அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாரா? அவ்வாறானால் அரசாங்கத்தின் முக்கிய பங்காளியான ஜே.வி.பி.யின் நிலை என்ன?

இரண்டவதாக, அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாரானால் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுப் பேச்சுக்கள் நடத்தத் தயாரா? அவ்வாறானால் இதில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன? அரசாங்கம் ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டிற்கு எதிராகச் செயற்படுமா?

மூன்றாவதாக, விடுதலைப்புலிகள் முன்வைத்த தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டம் குறித்து அரசாங்கம் பேசத் தயாராகவுள்ளதா? இது தொடர்பான ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன? என்பது போன்ற கேள்விகள் தவிர்க்க முடியாத முக்கியமானவையாகின்றன.

ஏனெனில், இன்றைய சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண்பதற்கு இக்கேள்விகளுக்குக் கட்டாயமாகப் பதில்கள் கிடைக்கப்பெற்றே ஆகவேண்டும். ஏனெனில், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான பொருத்தமானதும், தேவையானதும் என இவ்வழி கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரச தரப்பு - குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஐ.ம.சு.முன்னணியும் இதற்கு ஆதரவாக இருந்ததாகவும் இல்லை / இருப்பதாகவும் இல்லை. சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாக இருந்தபோதும் சரி, அவரது கட்சி எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதும் சரி, தற்பொழுது ஆளும் கட்சி வரிசையில் இருக்கின்றபோதும் சரி சமாதான முயற்சிகள் தொடர்பான சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய முன்னேற்றத்திற்கு ஏதுவானதாக இல்லை.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான



ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த வேளை, விடுதலைப்புலிகளுக்கும் - ரணில் அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பனவற்றைக் கடுமையாக விமர்சித்த சனாதிபதி சந்திரிகா, சமாதான முயற்சிகளுக்கு இடையூறு செய்யும் வகையில் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைக் கலைத்தார்.

நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குற்றம்சாட்டி ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கலைத்த அவர், பின்னர் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வழிவகை செய்தார். இதேவேளை, யு[illegible]த்தம் [illegible]டிக்கும் எனவும், சமா[illegible]னப் [illegible]ார்த்[illegible]கள் தொடரும் என[illegible]ும் தமது முன்னைய நிலைக்கு மாறாகவே அறிவிப்புச் செய்தார்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகக் கூறிக் கொண்டாலும், அவரின் நிலைப்பாடு தெளிவானதாகவோ, உறுதியானதாகவோ இல்லை. அத்தோடு, அவரது கூட்டணியின் நிலைப்பாடும் முரண்பாடு கொண்டதாகவே உள்ளது. சிலவேளைகளில் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் எனக் கூறும் சனாதிபதி சந்திரிகா வேறொரு வேளையில் அனைத்துத் தரப்பினருடனும் பேசப்படும் என்கின்றார்.

இதேசமயம், அவரது கட்சியிலுள்ள சில சிரேஷ்ட தலைவர்களும், அவரது கூட்டணிக் கட்சியின் முக்கிய கூட்டாளிகளான ஜே.வி.பி.யினரும் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்க மறுக்கின்றனர். அவ்வாறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்படக் கூடாது எனவும் எச்சரிக்கின்றனர்.

இதேவேளை, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப்புலிகளுடன் முதலில் பேசத் தயார் எனச் சிலசமயம் தெரிவிக்கும் சனாதிபதி சந்திரிகா இதற்கு மாறான வகையில், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேசும்போது நிரந்தரத் தீர்வு பற்றியும் பேசப்படுதல் வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிடுபவராகவும் உள்ளார்.

சனாதிபதி சந்திரிகா நேரத்திற்கு நேரம் முரண்பாடாகப் பேசுவது ஒருபுறம் இருக்க, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நிலைப்பாட்டில் ஆளும் கூட்டணியினர் மட்டத்தில் பலமான எதிர்ப்பும் உண்டு. அதிலும், தனியாக கூட்டணியிலுள்ள ஜே.வி.பி. மட்டுமல்ல, பிரதான கட்சியான சுதந்திரக் கட்சிக்குள்ளேயே சமாதான முயற்சிகளுக்குப் பலமான எதிர்ப்பும் உண்டு.

எடுத்துக் காட்டாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கடந்த வாரத்தில் சனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேசியபோது, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேசுவதற்குத்தான் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தார். ஆனால், தற்பொழுது அரச தரப்பால் அது மறுக்கப்படுகின்றது. அமைச்சரவைப் பேச்சாளரும் சரி இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். அதாவது, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து எதுவுமே பேசப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவிக்கின்றார். இது சனாதிபதியின் நிலைப்பாடா? அன்றி மங்கள சமரவீரவின் நிலைப்பாட[illegible]?

இதேவேளை, பிரதான கூட்டணியான ஜே.வி.பி.யோ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு பேச்சுக்களை நடத்துவதற்கும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுக்களுக்கும் தனது பலத்த எதிர்ப்பைக் காட்டுகின்றது. இக்கட்சியின் [illegible]திர்ப்பை மீறி சனாதிபதி சந்[illegible]ாவினால் சமாதான முயற்சிகளை மு[illegible]னெடுக்க முடியுமா?

இந்நிலையில்தான், முக்கியமானதொரு கேள்வியாக இனப்பிரச்சினைக்குப் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பனவற்றிற்குள் தீர்வொன்றைக் காண முடியுமா? என்பது எழுகிறது. ஏனெனில், ஐக்கியம் பிரதேச ஒருமைப்பாடு என்பன பேணப்படுதல் வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய அரசியற்தீர்வொன்றைக் காணுதல் வேண்டும். அப்பொழுதே ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் தமது உரிமைகளுடனும், பாதுகாப்புடனும் வாழுதல் முடியும்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாததும், தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படாதது மானதொரு நிலையில் எவ்வாறு தமிழ் மக்கள் ஒருமைப்பட்ட இலங்கைக்குள்-ஐக்கிய இலங்கைக்குள் வாழ்க்கை நடத்த முடியும். அவ்வாறு வாழ்வதானால் உரிமைகள் மறுக்கப்பட்ட, பாதுகாப்பு உறுதி செய்யப்படாத மக்களாகவல்லவா இருத்தல் வேண்டும்.

இந்நிலையில்தான், சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் கேள்வி ஒன்றைக் கேட்க வேண்டியதாகிறது. இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றிற்குள் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை இவர்களால் கொண்டுவர முடியுமா? அதாவது, பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பன அடங்கலாக தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாக்கக் கூடிய வகையிலான திட்டம் ஒன்றிற்கு சிறிலங்கா அரசாங்கத்தை இணங்க வைக்க முடியுமா?

ஆனால், இது எத்தனை தூரம் சாத்தியப்பாடானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், ஐக்கியம், ஒருமைப்பாட்டை வலியுறுத்துபவர்கள் சிறிலங்கா அரசின் மீது கொடுக்கும் அழுத்தத்திற்கு சிங்கள ஆட்சியாளர்கள் பணிந்துபோய்விடப் போவதில்லை. அண்மைக் காலத்தில் இதற்கான சமிக்ஞைகள் பல தெளிவாகவே வெளிவந்துள்ளன. குறிப்பாக, சிறிலங்காவிற்கு நிதி உதவி வழங்கும் நாடுகள் தொடர்ச்சியாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறு வற்புறுத்தல்களை விடுத்தபோது சனாதிபதி சந்திரிகாவோ, அரசாங்கமோ கண்டு கொன[illegible] இல்லை. அதற்கான அரசியற் சூழ்நிலையும் அங்கில்லை.

இந்நிலையில், சமாதான முயற்சிகளில் உறுதியான முன்னேற்றம் எதுவும் காணப்படாமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமும், பாதுகாப்பும் உறுதி செய்யப்படாமல், இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பனவற்றிற்குள் தீர்வொன்றை எவ்வாறு காண முடியும்? மறுவளமாகக் கூறுவதானால், இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணச் சிறிலங்கா அரசாங்கம் தயாராக இல்லாத நிலையில், எவ்வாறு இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு என்பதும், ஐக்கிய இலங்கை என்பதும் சாத்தியப்பாடானதாகும்? சர்வதேச சமூகத்தினால் தமது எதிர்பார்ப்பிற்கு ஏற்றதான இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்ட முடியும்?

- ஜெயராஜ்

# காவிரி நீர் வருகை; மீண்டும் முழம் சறுக்குமா...?

அ.கலைவாணி

"தமிழகத்திற்கு, கர்நாடக அரசு காவிரி அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடுவது எப்போது...?" என்றுதான் காவிரி டெல்டா (வடிநிலம்) விவசாயிகள் இரண்டாண்டு ஏக்கத்திற்கும் பெருமூச்சுக்கும் ஆளாகி இருந்தனர். தற்போது கர்நாடக அரசு காவிரியிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டுள்ளது.

இந்தநிலை காலம் முழுவதும் தொடருமானால் இதுவரை காவிரி டெல்டா விவசாயிகள் பட்ட துன்பங்கள் துயரங்கள் எல்லாம் காற்றில் பட்ட கற்பூரமாய் காணாது போய்விடும் என்று ஓரளவு நம்பமுடியும்.

கடந்த 2002ஆம் ஆண்டின் பின்னர் கர்நாடக அரசு காவிரித் தண்ணீரைத் திறந்து விடுவதில்லை எனும் பிடிவாதத்தில்இருந்து வந்தது.

தற்போது கர்நாடகம் தனது பிடியை தளர்த்தியுள்ளது. அதனால் காவிரித் தண்ணீர் தமிழகத்தில் பாய்ந்து செல்கின்ற நிலை உருவாகியுள்ளது.

ஏனெனில் காவிரியில் மழை காரணமாக நீர்மட்டம் அதிகரிக்கும்போது கர்நாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவது வழமை. தமது மாநிலத்தில் வெள்ளப் பெருக்கைத் தடுப்பது அதன் பிரதான நோக்கம். அந்தவகையில்தான் தற்போதும் காவிரி உற்பத்தியாகும் இடத்தில் மழை பொழிகின்றது. நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. அதனால் காவிரி திறக்கப்பட்டிருக்கிறது அவ்வளவுதான்.

கர்நாடக அரசு காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, காவிரியைத் திறந்துவிட வேண்டும் எனும் கோரிக்கைகளும், அழுத்தங்களும் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு வினாடிக்கு 9000 கன அடி தண்ணீரைத் திறந்துவிட வேண்டும்.

ஆனால் முன்னரெல்லாம் கர்நாடக அரசோ வரட்சி, குறைந்தளவு மழை வீழ்ச்சி, கர்நாடக விவசாயிகளுக்கே நீர்ப்பற்றாக்குறை என்று சாக்குப் போக்குகளைக் காட்டி எப்போதுமே காவிரிநடுவர் மன்றத் தீர்ப்பின்படி நடந்து கொண்டதுமில்லை. போதியளவு தண்ணீரைத் திறந்து விட்டதுமில்லை.

ஆனால் "கேட்டது கிடைக்கவில்லை. கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைவோம்" என்பதுபோல தமிழக விவசாயிகள் கர்நாடகம் திறந்துவிடும் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்வது வழமை.

அத்துடன் இயற்கையும் தமிழக மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதுபோல் மழையாகப்பொழியும். இதனால் போதுமான தண்ணீரைக் கர்நாடகம் திறந்துவிடுவதில்லை எனும் குற்றச்சாட்டும் மழையுடன் அடிபட்டுச் செல்வதும் வழமை.

ஆனால் தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா எப்போது பதவி ஏற்றுக்கொண்டாரோ அப்போதே இந்த நிலையும் மாறிவிட்டது.

அதிரடிகளுக்குப் பெயர்பெற்றவர் ஜெயலலிதா காவிரி நீர் விடயத்திலும் அதனைத்தான் கையாள முனைந்தார். 2002இல் காவிரி நீரைக் கர்நாடகம் திறக்கவேண்டும் என்று பேச்சுவார்த்தை மூலமோ... வேண்டுகோள் மூலமோ.. கேட்க அவர் நினைக்கவில்லை.

காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தந்தே ஆகவேண்டும். காவிரியில் தமிழகத்திற்கும் உரிமை உள்ளது எனத் தர்க்கம் செய்தார். இல்லையேல் நீதிமன்றம் மூலம் தமிழகத்திற்கு காவிரியை கொண்டுவருவதாக சபதம் செய்து சுப்ரீம் கோட் ஏறினார்.

இறுதியில் எல்லாமே தோல்வியில்தான் முடிந்தது. இருமாநிலங்களும் மக்களும் முரண்பட்டுக்கொண்டனர். அது மட்டுமன்றி காவிரி, தமிழகத்திற்கு எட்டியும் பார்க்காத நிலையாக மாறிவிட்டது.

காவிரியில் தமிழகத்திற்கு உரிமை இருக்கின்றது. ஆனால் உரிமையை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்பதுடன் நிறுத்தியிருந்தால் தண்ணீர் கிடைத்திருக்க முடியும்.

ஆனால் அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த கிருஸ்ணாவை அவதூறாகப் பேசினார். அவர் மீது அவமதிப்பு வழக்குத் தொடுத்தார். இதனால் ஏற்பட்டது ஒன்றே ஒன்றுதான். காவிரி தமிழகத்திற்கு வராதநிலை மட்டும்தான்.

இதனால் தமிழகத்தில் காவிரி டெல்டா விவசாயிகள்தான் பாதிக்கப்பட்டனர். விவசாயிகளுக்காக போராட்டங்களை முன்னெடுத்தவர்களெல்லாம் ஓர் எல்லைக்கப்பால் போதுமடா சாமி என்று சொல்லாமல் கொள்ளாமல் நழுவினர். இதில் தமிழக நடிகர்கள் பட்டாளமும் உள்ளடக்கம் முக்கியமாக சுப்பர்ஸ்ரார் என்று வர்ணிக்கப்படும் ரஜனிகாந்தும் நழுவல் போக்கில் ஓட்டம் காட்டியவர்தான்!

இதனால் பெரியளவில் காவிரி டெல்டா விவசாயிகள்தான் பாதிக்கப்பட்டனர். தமிழக முதலமைச்சரோ தனது பிடிவாத வரட்டுகௌரவத்திலிருந்து வெளிவந்து, மக்களை காப்பாற்ற சிறு அசைவு கூடக் காட்டவில்லை.

தான், தனது இஸ்ரம், தனது கருத்து என்பவற்றில்தான் அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். தனது சொந்தக் காரணங்கள், தேவைகள் என்பவற்றை முன்நிறுத்திய தமிழக முதலமைச்சர், எந்த நிலையிலும் காவிரி டெல்டா விவசாயிகளின் நிலைமையைக் கணம் கூட சிந்தித்துப் பார்க்க அவர் தவறிவிட்டார்.

இதனால் மொத்த விவசாய உற்பத்தியில் தமிழகத்தில் இருந்து 34 சதவீதம் கிடைக்கும் விவசாய உற்பத்தி கேள்விக்குறியானது.

அது மட்டுமன்றி தமிழகத்தில் திருவாரூர், நாகபட்டினம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் காவிரி நீரை மட்டும் நம்பி விவசாயம் செய்பவர்கள் 36இலட்சம் பேர். இந்த 36இலட்சம் மக்களின் வாழ்க்கையில் வறுமை தாண்டவமாடியது.


விவசாயம் வரட்சியைக் காட்டவே, விவசாயிகள் தமது விளைநிலங்களிலேயே தற்கொலை செய்தல், பயிர்கள் கருகியதை பார்த்தவர்கள் மாரடைப்பில் உயிர்விடுதல் என்பன விவசாயிகளிடையே அதிகரித்தது.

நெல் அரிசிச் சோற்றின் பெருமைகளை எடுத்துக் கூறும் விவசாயிகளே நத்தைகளையும், எலிகளையும் உணவாக உட்கொள்ளும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இவற்றையெல்லாம் கண்டும், காணாதது போல இருந்தவர்தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. இந்த விவசாயிகளின் அவலத்தை ஊடகங்கள் எடுத்துக் கூறியபோதெல்லாமே பொய், உண்மையில்லை என்று வாய் கூசாது பொய் பேசினார்.

இன்று எல்லாமே மாறிவிட்டது மக்களவைத் தேர்தல் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை ஆட்டம் காண வைத்ததோ இல்லையோ ஆனால் அவர் ஆடித்தான் போய்விட்டார்.

அதனால்தான் இன்று காவிரியைக் கார்நாடக அரசு திறந்துவிடவேண்டும் என்பதில் தமிழக முதல்மைச்சர் ஜெயலலீதா அமோக பணிவு காட்ட ஆரம்பித்துள்ளார். தமிழகத்திலிருந்து பன்னீர்ச்செல்வம் தலைமையில் குழுவொன்றை கர்நாடகத்திற்கு அனுப்பியிருந்தார்.



"காவிரி திறக்கப்பட வேண்டும்" தி.மு.க. கூட்டணி மத்திய அரசிடம் மகஜர் கையளிப்பு

ஏனெனில் சட்டமன்றத் தேர்தல் வருவதற்குள்ளே இருக்கும் அவகாசத்தை, இடைவெளியைப் பயன்படுத்தி தமிழக மக்களை தன்வசப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் காட்டத் தொடங்கியுள்ளார்.

எல்லாவற்றிலும் பிரதானமானது, காவிரிப் பிரச்சினை. அதனை தி.மு.க.கூட்டணிதான் தீர்த்து வைத்தது என்றும், சமரசத்தை ஏற்படுத்திவிட்டது என்றும் முழுதாக வெற்றியை அக்கட்சியிடம் கையளிக்கக் கூடாது . தமிழக முதலமைச்சரும் தமக்காகப் பாடுபட்டார் என்பதனை விவசாயிகளிடையே ஏற்படுத்துவதே தமிழக முதலமைச்சரின் செயற்பாடுகளின் பின்னணியாக இருக்க முடியும்.

ஆனால் ஏற்கனவே கர்நாடகத்துடன் பகைமையைப் பாராட்டாது விட்டிருந்தால், தமக்கு அவலம் ஏற்பட்டிருக்காது என்பது தமிழக விவசாயிகளின் ஆழ்மனக்கிடக்கை.

எனவே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது இப்போதும் எப்போதும் எவ்வளவு தூரம் விவசாயிகள் நம்பிக்கை வைப்பார்கள் என்பது வினாவாகவே இருக்கும்.

ஆனால் தி.மு.க. கூட்டணியோ, காவிரிச் சிக்கலை தீர்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு தான் செயல்களில் இறங்கியது.

இதற்குக் காரணம் இல்லாமலில்லை. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலின்போது, 40 தொகுதிகளையும் மக்கள் அள்ளிக் கொடுத்திருக்கின்றார்கள் இந்த நம்பிக்கையை சிந்தாமல்,சிதறாமல் பாதுகாக்க வேண்டும். அப்போது தான் சட்டமன்றத் தேர்தல் வெற்றியையும் மக்கள் அள்ளிக் கொடுப்பார்கள் என்பது தி.மு.கவின் அரசியல் கணக்காகக் கூட இருக்க முடியும்.

இதனால் தான் கர்நாடகத்துடன் பரஸ்பர நல்லுறவுகளை மேம்படுத்துவதன் மூலம்தான் காவிரியைத் தமிழகத்திற்கு கொண்டுவர முடியும் என்பது அக்கட்சியின் திடமானமுடிவு.

அதுமட்டுமன்றி முன்பு மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சி. கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி எனவே காவிரியைத் தமிழகத்திற்கு கொண்டு வருவதில் சிக்கல்கள் உருவாகி இருக்கமுடியும் அத்துடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தடாலடி செயற்பாடுகளும் நன்மையை ஏற்படுத்தவில்லை எனலாம்.

ஆனால் தற்போதைய நிலை வேறு. மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைத்துள்ளது. அதேபோல் கர்நாடகத்திலும் காங்கிரஸ் கூட்டணிதான் ஆட்சியமைத்திருக்கிறது.

இதனால் தான் காவிரி திறக்கப்பட்டுள்ளதோ..... அல்லது காவிரியில் மழை காரணமாக நீர் மட்டம் அதிகரித்துள்ளதையடுத்துக் காவிரி திறக்கப்பட்டுள்ளதோ... எதுவானாலும் காவிரி தமிழகத்திற்கு வந்துள்ளது.

இதேவேளை எதிர்கட்சிகள் வரிசையில் இருக்கும் பாரதிய ஜனதா கூட்டணி தங்களால் சாதிக்க முடியாததை தி.மு.க. கூட்டணி சாதிப்பதைப் பொறுத்துக் கொள்ளுமா....? என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

இதற்காக கர்நாடக பாரதிய ஜனாதாவை உசுப்பி விடக்கூடும் கர்நாடக விவசாயிகளின் நன்மைகருதி தமிழகத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ள காவிரியை வரட்சிக்காலத்தில் பூட்டுமாறு போர்க்கொடி தூக்கவும் கூடும்.

இதனால் தற்போது பயிர்ச்செய்கை தொடங்கியுள்ள காவிரி டெல்டா விவசாயிகள், அப்போது வரட்சியை சுமக்கக்கூடும்.

இதன் மூலம் மீண்டும் காவிரி டெல்டா விவசாயிகள் கடுமையான விளைவுகளை, அனுபவிக்க நேரிடும்.

ஆனால் காவிரி டெல்டா விவசாயிகளின் தண்ணீர் விடயத்தில் நிரந்தரமான ஒரு முடிவு எட்டப்படாத வரை காலத்துக்குக்காலம் விவசாயிகள் பாதிக்கப்படுவது மாறப்போவதில்லை. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நதிகள் இணைப்புத் திட்டம் பற்றிப் பேசினார். ஆனால் அவர் அத்திட்டத்தை நிறைவேற்ற முனைப்பு காட்டவில்லை.

அதேபோல் நடிகர் ரஜனிகாந்தும் அப்படித்தான். நதிகள் இணைப்பு என்றார், ஒரு கோடி தான் தருவதாகப் பறை சாற்றினார், அவ்வளவுதான்.



எனவே காவிரி டெல்டா விவசாயிகளின் பிரச்சினை தற்போது தற்காலிகமாகத்தான் தீர்ந்துள்ளது என்றுதான் கூறவேண்டும்.

தற்போது மழை காரணமாகக் காவிரி திறக்கப்பட் டுள்ளது. வரட்சிக் காலத்தில் பூட்டப்படாது என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை. அதேபோல் மத்தியில் காங்கிரசுக்கும் தமிழக தி.மு.க.வுக்கும் நிரந்தரமாக ஆறாண்டுகள் உறவுகள் விரிசல் விழாது நீடிக்குமானால், தொடர்ந்து கொஞ்சம் கொஞ்ச மாகவாவது தமிழகம் காவிரிநீரைப் பெறும் சாத்தியம் உண்டு.

எனவே காவிரி டெல்டா விவசாயிகள் விடயத்தில் அரசுகள் மறினாலும் மாறாத தீர்வொன்று காணப்பட வேண்டும் இல்லையேல் காலத்துக்குக் காலம் விவசாயிகளின் துயர நிலை மாறப்போவதில்லை.

எது எப்படியோ.... கர்நாடகம் காவிரித் தண்ணீரைத் திறந்து விட்டுள்ளதையடுத்து தமிழக விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்க்கும் நற்செயலாகவே இது இருக்கமுடியும். இந்தியா ஒளிர்கின்றதோ இல்லையோ கர்நாடகத்திலிருந்து தண்ணீர் கிடைத்துள்ளதையடுத்தும் தொடர்ந்து வரட்சிக்காலத்திலும் தண்ணீர்திறந்து விடப்படுமானால் நிச்சயம் காவிரி டெல்டா விவசாயிகள் ஒளிர்வார்கள் என்று நம்பமுடியும்.

♥♥♥

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# அகதிவாழ்வு நீங்கவேண்டுமென அலைவுறும் தமிழ்மக்கள்

## இன்று சர்வதேச அகதிகள் தினம்

மனித இனத்தை வதைத்து வருகின்ற கொடுமையான வாழ்வு என்னும் போது எம்மனங்களில் வந்து விரிவது அகதி வாழ்வு. தமிழினத்தால் மறக்க முடியாததும் தொடர்வதுமான இந்த அகதிவாழ்வு எம்மினத்தை மட்டுமல்ல உலகளாவிய நிலையிலே பல்வேறுபட்ட நாடுகளின் குடிசனங்களையும் வாட்டிவதைத்து வருகின்றது என்பது உண்மை.



மனித வாழ்வென்னும் போது அங்கே அத்தியாவசியமாக நோக்கப்படுவது தமக்கென இருக்கும் உறையுள் அதாவது மனிதனின் இருப்பிடம். அந்த இருப்பிடத்தை வைத்தே மனிதன் தன் வாழ்வின் முகவரியை இவ்வுலகில் பதிக்கிறான். சொந்த வீடு என்றும், சொந்த ஊர் என்றும், சொந்த நாடு என்றும், சொந்த பந்தங்கள் என்றும், தன்னைப் பெருமையோடு அடையாளப்படுத்திக்கொள்ளும் மனிதன் பல்வேறு காரணங்களால் தன்வீடு, ஊர், நாடு என்பவற்றை விட்டு விருப்பின்றி வெளியேறுகின்ற அல்லது வெளியேற்றப் படுகின்ற நிலையில் அகதி என்ற அவப் பெயரைத் தாங்கிக் கொள்கின்றான். பெரும்பாலும் மனிதனது அகதிவாழ்விற்கு மனிதனே காரணமாக இருக்கின்றான் என்ற கசப்பான உண்மை மனித சமூகத்தின் மீது விழுந்த பெரும் சாபக்கேடாகவே உள்ளது.

நாகரிகமடைந்த பின் ஆரம்ப காலத்தில் இயற்கை அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து அகதிவாழ்வு நிலையில் இருந்த மனிதன் வளர்ந்து வரும் நவீன யுகத்தில் மனித இனத்தினாலேயே விரட்டப்படுகின்ற நிலை தற்போதைய கால கட்டத்தில் பெருகிவருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

அதாவது அகதிவாழ்வைச் சந்திக்கும் மக்கள் ஒரு நாட்டினுள் ஏற்படும் போரினாலும் அந்நாட்டிற்குள் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களினாலும் தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறி தமது நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளிலும் சென்று மக்கள் அகதிவாழ்வை வாழ்ந்து வருகின்றனர். அதாவது ஒரு நாட்டில் ஏற்படும் இயற்கையோடு தொடர்புடைய வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, எரிமலை, துருவப் பகுதி பாலைவனமாகி வருதல் போன்ற மனிதவாழ்விற்கு ஒவ்வாமையான நிகழ்வுகளினாலும் அகதி வாழ்வினைச் சந்தித்து வருகின்றனர்.

எமது நாட்டினைப் பொறுத்த வரை இவ்வாறான இயற்கையான அழிவுகள் பெரிதாக இல்லாவிடினும் தமிழர்தாயகப் பகுதியை தமது ஆக்கிரமிப்பிற்குள் கொண்டுவர நினைக்கும் பெரும்பான்மை இனமான சிங்கள ஆட்சியாளரிடமும், இராணுவத்தினரிடமும் இருந்து வருகின்ற திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் தமிழினத்தை அழித்தொழிக்க நினைக்கும் சில தீய சக்திகளினது ஏற்பாட்டிலுமே எமது மக்கள் சொந்த பந்தத்தை இழந்து, சொந்த ஊரைவிட்டு, சொந்த நாட்டை விட்டே வெளியேற்றப்பட்டு இன்று எத்தனையோ அகதிமுகாம்களிலும், பல்வேறுஅந்நிய நாடுகளிலும் அகதி என்ற பட்டத்துடன் தமது வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் தமிழர் தாயகப்பகுதியான வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக இரண்டு இலட்சத்து இருபத்திஏழாயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து அகதி வாழ்விற்கு உள்ளாகி உள்ளனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களில் 30 ஆயிரம் பெண்கள் தமது குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர். இவர்கள் தமது குடும்பத்தை மேற்கொண்டு நடத்துவது என்பது பெரிதும் கஷ்ரமான விடயம். அகதி முகாம்களில் இருந்து கொண்டு அங்கு கிடைக்கப் பெறும் நிவாரணங்களை மாத்திரம் கொண்டு தம் அன்றாட வாழ்க்கையை நகர்த்துவது என்பது இன்று வளர்ந்து வரும் நவீன காலத்தில் மிகவும் கடினமான விடயமாக உள்ளது.

இவ்வாறு தொடர்ந்து அகதி வாழ்விலேயே வாழ்வதனால் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. இதனால் உடல் உளரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகி வருபவர்களின் தொகையும் வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே அதிகரித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட போர் காரணமாக 3 இலட்சம் சிறார்கள் மிகவும் மோசமாக உடல் உள ரீதியாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். இவ்வாறு குறுகிய ஒரு காலப் பகுதிக்குள் இச்சிறுவர்கள் பாதிப்புக் குள்ளாகும் போது எமது நாட்டின் .எதிர் காலத்தைக் கட்டிக்காக்கின்ற இன்றைய சிறார்களின் வளர்ச்சியும் குறைவாகவே உள்ளது. இவர்கள் அகதி வாழ்வில் இருப்பது ஒருபுறம் இருக்க, அவர்களுடைய வளர்ச்சி, தேவைகள் அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலைக்கே தள்ளப்படுகின்றனர். இவர்களுடைய தேவைகள் முன்னேற்றங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயின் எமது நாட்டில் நிகழும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பூரண சமாதானம் ஏற்பட்டு அகதி முகாம்கள் இல்லாது சொந்த மண்ணில் சொந்த வீட்டில் இருக்கும் நிலை தோன்ற வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது. அத்துடன் இவ் அகதிவாழ்வினால் 35 ஆயிரம் சிறார்கள் பராமரிப்பு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். பெருமளவான சிறார்கள் தமது கல்வியினை இடை நிறுத்தியும் உள்ளனர். அகதி வாழ்க்கை என்ற எதையுமே அறியாத சிறார்கள் மத்தியில் தமது வாழ்வில் மேலும் முன்னேறிச் செல்லும் சிந்தனையே நித்தம் தோன்றும். ஆனால் இங்குள்ள சிறார்களின் மனதிலோ நித்தம் குண்டு வீச்சின் சத்தமும் அடுத்த கட்டம் எங்கு ஓடிப்போவது [illegible]கு தமது தரிப்பிடம் பாடசாலையா, மரத்தடியா, அல்லது வீதியோரமாக இருப்பதா என்ற எண்ணமே தோன்றும்.

மேலும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம் பெயர்ந்து வாழ்பவர்களில் கரையோரப்பகுதியைச் சேர்ந்த மக்கள் போராட்ட காலங்களில் மிகவும் பாரதூரமான விளைவுகளைச் சந்தித்து வந்தார்கள். ஒரு நாளைக்குள் எத்தனையோ தரம் தமது இருப்பிடத்தை விட்டு ஓடி மக்கள் குடியிருப்பை நோக்கி வருவார்கள். பின் கடலில் வெடிச்சத்தம் சற்றுக் குறைய மீண்டும் தமது இடத்திற்கு செல்வார்கள். இவ்வாறு மிகவும் போராட்டம் நெருக்கடியாக நடந்த காலத்தில் அவர்கள் பட்ட இன்னல்கள் சொல்லில் அடங்காதவை. இவ்வாறு ஏனைய பகுதி மக்களும் போர் க்ாரணமாகப் பட்ட அவலங்கள் அனைத்தையும் அவர்களது சிதறியவாழ்வையும் சேர்த்தே "அகதி" என்ற பட்டத்தைப் பெற்று அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான அகதிவாழ்க்கை போராட்ட காலத்தில் இருந்தாலும் தற்போது நிகழும் சமாதான சூழ்நிலையில் அல்லது யுத்த நிறுத்த காலகட்டத்திலாவது இவ் அகதி முகாம்களில் வாழ்பவர்களுக்கு ஒரு விடிவு காலம் தோன்றாமல் இருப்பதே மிகவும் வேதனை தரும் விடயம்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இன்றைக்கு இரண்டரை வருடங்கள் தாண்டியும் அகதி வாழ்வு வாழும் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது. இதற்கு முதற்காரணம் இராணுவத்தால் போடப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெரிய தடைக் கல்லாகும். இப்பகுதிகளுக்குள் ஏராளமான மக்கள் தமது வாழ்விடங்களில் குடியமரக்கூடிய சூழ்நிலை இருந்தும் அதற்கு முடியாத நிலையில் உள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டித் தம்மைப் பலப்படுத்தும் இராணுவத்தினர் மக்களை குடியமரவிடாது அகதி முகாம்களிலேயே தொடர் அவலவாழ்வினை சந்திக்க வைத்துள்ளனர். இவற்றுக்குரிய துரித நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், அரச தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மாறிமாறி மேற்கொண்ட போதும் உடனடிப்பலன் எதுவும் கிடைக்கவில்லை. மாறாக கண்துடைப்பு நடவடிக்கை போல் சில பகுதிகளில் மக்களை மீளக்குடியமர இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர். சொந்த மண்ணில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தமது சொந்த இடத்திற்கு மீண்டும் திரும்பும் போது ஆக்கிரமிப்பாளரிடம் அனுமதி பெற்றுச் செல்வது என்பது மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும் அவலத்தையுமே ஏற்படுத்தி வருகின்றது. அத்துடன் மீளக்குடியேறிய மக்களிடம் போடப்படும் இறுக்கமான கட்டுப்பாடுகள் அவர்கள் அகதிமுகாமில் சந்தித்த அவலத்தை விட மிகவும் வேதனை தரக்கூடிய விடயமாகவே உள்ளது.

எனவே தமிழர் தாயகப்பகுதியில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மிகவிரைவில் முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் எமது பகுதியில் இருக்கின்ற அகதி முகாம்களை ஒழித்து அவர்களின் சொந்த இடங்களில் அவர்கள் வாழ்கின்ற நிலையை ஏற்படுத்தி அவர்களின் தேவைகள் முன்னேற்ற நடவடிக்கைகள் அனைத்தையும் சீர்செய்வதுடன் இனிவரும் காலங்களிலாவது அவலவாழ்வு, அகதி வாழ்வு என்பன நீக்கப்பட்டு இன்றைய சிறார்களை நாளைய சந்ததியின் தலைவர்களாக விளங்கச் செய்யவேண்டும்.

இதேவேளை இந்த மக்களும் சரி, வெளிநாடுகளிலே இலட்சக்கணக்கில் தஞ்சமடைந்து அகதிவாழ்வு வாழும் மக்களும் சரி அகதி என்ற பெயர் ஒழிந்து சொந்த வீட்டில் நிம்மதியாக வாழ நிரந்தர அமைதி திரும்ப வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

தமது சொந்தத் தாயகத்தில் தமது அரசியல் பொருளாதார உரிமைகளுடன் பாதுகாப்பாக வாழவே விரும்புகின்றனர். இன்றைய அமைதி நீடித்து சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமது எதிர்பார்ப்புகள் நிறைவேறவேண்டுமென்றே விரும்புகின்றனர். இதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் இணங்கி வருவார்களா? என்ற ஏக்கம் அவர்களிடம் உண்டு.

அத்தோடு அனைத்து நாடுகளிலும் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி வதைக்கும் சூழ்நிலைகள் நீக்கப்பட வேண்டும். அகதி வாழ்வினைச் சந்தித்து வரும் ஒவ்வொரு நாட்டு மக்களும் தமது சொந்த இடங்களில் வாழ அனைவரும் முன்வந்து ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு அதற்குத் தீர்க்கமான முடிவுகளைக் கண்டு, ஒவ்வொரு குடிமக்களையும் தமது சொந்த ஊரிலே தமக்கு உரிமையான நிலத்தில் வாழ வைக்க வேண்டும். அப்போது தான் எந்த ஒரு நாட்டிலாவது அகதி முகாம் என்ற பெயர் மறைந்து அனைத்து மனித உள்ளங்களும் சம அந்தஸ்துடன் உலவி தமது சொந்த பந்தங்களுடன் சுகமான வாழ்வினை அனுபவிப்பார்கள் . இவ்வாறு தாம் வாழ வேண்டும் என்பதே இன்று அகதி முகாமில் அவல நிலையுடன் வாழும் ஒவ் வொரு உள்ளங்களினதும் பெரிய எதிர் பார்ப்பாக உள்ளது.

**கலாவரன்**

● ● ●

## அஸ்தமிக்கும் அகதி வாழ்வு

சொந்தமண்ணின் வாழ்வதனை
வந்தபகை பறித்து விட
பந்தங்களை இழந்தவரே
உந்தன் பெயர் அகதியாமே

வெந்த புண்ணில் வேலாக
இந்தநிலை உமை வருத்த
கந்தகத்தைச் சுமந்தவரை
உந்தன் கரத்தால் அணைத்தீரே

மந்தைகளாய் நீர் உலகில்
வெந்து நிற்கும் நிலைகண்டு
சொந்த மண்ணில் புலிகள் இங்கு
வந்த பகை விரட்டி விட்டார்

சந்ததியின் வாழ்வதனை
இந்த மண்ணில் காப்பதற்காய்
கந்தகத்தைச் சுமந்த புலி
வெந்தணலில் குளிக்குதிங்கே

சிந்திய இரத்தமிங்கே
தந்திடுமே ஈழமொன்று
முந்தைத் தமிழ்ப்பரம்பரையாய்
எந்தன் நாட்டை நாமாள்வோம்

நொந்து போன மனங்கள் - இங்கு
வந்து வாழத் துடிக்கிறது
இந்த ஈழம் எங்கள் என்றே
எந்தநாளும் நாங்கள் வாழ்வோம்.

*முத்தையனூர்: துஷ்யந்தன்*

# அகவை 60 பூர்த்தியாகும் அன்பு ஆசான் உயர்திரு. கந்தையா சரவணபவன் அவர்களின்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், சிரேஷ்ட போதனாசிரியர் - முல்லைத்தீவு கல்வி வலயம், பட்டப் பின் டிப்ளோமா முல்லைத்தீவு மாவட்டம்.)

# சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ் - 20.06.2004

## சுடரொளியாக சேவையாற்றிய நல்லாசானின் நினைவுகள் சில...

கல்வியை வழங்கும் நிறுவனங்களில் சேவையாற்றுவோரின் விளைதிறன் குன்றியுள்ள இக் காலகட்டத்தில் வன்னியிலே சுடரொளி போல் மிளிர்ந்த மூத்தாசான் திரு.க.சரவணபவன் அவர்கள் தனது பெருமைக்குரிய சேவையில் இருந்து ஓய்வுபெறச் செல்லும் வேளையிலே அவரது கல்வி வரலாற்றை புரட்டிப் பார்க்கின்ற போது இவர் எம் நாட்டுக்குக் கிடைத்த பெரும் செல்வம் என்பது மிகையாகாது.

கல்வியில் மாணவர்களது ஈடுபாடும் அவர்களது வெற்றியும் நல்லாசான் ஒருவனின் பின்னணியிலேயே தங்கியுள்ளது என்பதை இவரது வெற்றிவாழ்வு எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது, நேரான நடை நிமிர்ந்த பார்வை, ஓங்கி ஒலிக்கும் சிம்மைக்குரல் மீள வலியுறுத்தும் பாணி, சிரித்து மகிழும் பேச்சு வழக்கு, எதையும் தாங்கும் இதயம், தெளிவான சிந்தனை, சமநிலைப் பண்பு இவையாவும் இவரது சேவையிலே நாம் கண்டு கொண்ட அரிய பண்புகள்.

இப் பண்புக் கூடாக சரவணபவன் தனது சீரான சேவையை எம் சிறார்களுக்கு வழங்கியுள்ளார் இவரைப் போல் ஆசான்கள் பலரை கல்வியுலகு உருவாக்க வேண்டுமென்பதே எனது பேரவா.

ஆறு வருடங்களாக இவரோடு இணைந்து பணியாற்றியமை என்றும் என் மனதில் பசுமையாக நிலைத்திருக்கும், அவர் இல்லாத போது எவ்வாறு பணிகளை மேற்கொள்ளலாம் என்ற சிந்தனை மேலோங்குகின்ற போது எம்மருகே இவர் வாழ்வதனால் அவரின் ஆலோசனையை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம் என்பது எனக்கு ஆன்மதிருப்தி.

இளைப்பாற்றுக் காலத்திலும் கல்விக்கு இவர் பல தொண்டுகள் செய்ய வேண்டும் என வாழ்த்தி அவர் எமக்களித்த சேவையைப் போற்றி அவரது இளைப்பாற்றுக் காலத்தை இனிமையுடன் கழிக்க மனமார வாழ்த்துகின்றேன்.

**த.குருகுலராசா**
**வலயக்கல்விப் பணிப்பாளர்.**

## கல்வி உலகிற்கு முன்னுதாரணமாக விளங்கியவர்

1971.01.05இல் பட்டதாரிஆசிரியராக நியமனம் பெற்று பொலநறுவை, முல்லைத்தீவு மாவட்டங்களில் நல்லாசிரியனாக தலைசிறந்த பாடசாலை முகாமையாளராக விளங்கியவர் ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு கல்வி புகட்டி மாணவர்களை பல்கலைக் கழகம் அனுப்பிய பெருமைக்குரியவர்.

கல்வித் திணைக்களத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் பல பதவிகளில் ஆரோக்கியமாக கடமையாற்றிய எமது வலயக்கல்வி பணிமனையை அலங்கரித்த பெருமகன் 1993ஐ அடுத்து மாவட்டக்கல்விப் பணிப்பாளரின் கடமையையாற்றிய தலைசிறந்த தமிழ் அறிஞர் கல்விஉலகிற்கு முன்னுதாரணமாக விளங்கியவர். ஒரு தசாப்தத்திற்கு மேலாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். கல்விமாணிப் பட்டக் கற்கைநெறியில் மூத்தவிரிவுரையாளராக கடமையாற்றி வன்னிமண்ணில் கல்விக்கு அயராது உழைத்து வருகின்றார். எதிர்காலத்திலும் வன்னிப்பிள்ளைகளின் கல்விப் பசிக்கு ஊட்டமளிக்க வேண்டுமென்று ஆசீர்வதிக்கின்றேன். எமக்கெல்லாம் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் முன்மாதிரியாகவும் இருப்பதையிட்டுப் பெருமையடைகின்றேன்.

**நண்பரும், ஊரவரும் சகஉத்தியோகத்தருமான,**
**ச.நாகரத்தினம்,**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு.**

# சரவணபவன் அவர்கள் - ஒரு பல்துறை விற்பன்னர்



சிம்மக் குரலோன். சீரான சிந்தனையாளன் நகைச்சுவை இழையோடக் கதை கூறி சிங்காரச் சிரிப்பு உதிர்த்திடும் எம் அன்பு ஆசான் க.சரவணபவன் அவர்கள் ஒரு பல்துறை விற்பன்னர். சிறந்தஒரு ஆசிரியராக இருந்து பலரைச் சிறப்பான நிலைக்கு உயர்த்தியவர்.

உயர்ந்த ஒரு அதிபராக இருந்துமுத்திரை பதித்தவர்.உதவிக்கல்விப் பணிப்பாளராக முல்லைத்தீவு மாவட்டம் அனைத்திற்கும் பணியாற்றிய போது மாவட்டக்கல்வி வளர்ச்சியில் அளப்பரிய சேவையாற்றியவர்.



**பாடசாலை விழாவொன்றில் பிரதம அதிதியாக - துணைவியாருடன்**

பிரதிக்கல்விப் பணிப்பாளராக முல்லை வலயத்தில் பணியாற்றி ஓய்வுபெறும் இவர் ஆசிரியப் பயிற்சிகளை அர்த்த முள்ள தாக்கியவர். சிறந்த முகாமையாளராகத் தம்மை நிலை நிறுத்தியவர். நிர்வாகக் கடமை முகாமைத்துவப் பணிக்குள் சென்ற பலர் தம்சுயமிழந்து போனதுண்டு. ஆனாலும் இவர் இப்பாரிய பணிகளுடன் தன் தனித்திறமைகளையும் வெளிப்படுத்தி நின்றவர். பணிநேரம் முழுமையாக அர்ப்பணித்தது போக மீதி வேளைகளில் ஒரு சமயப்பிரசங்கியாக. சமயத்தொண்டனாக. ஒரு வரலாற்று விரிவுரையாளராக. ஆய்வாளராக. ஒருநடிகராக. ஒரு அண்ணாவியராக ஒரு எழுத்தாளராக. ஒரு பேச்சாளராக. ஒரு மொழிபெயர்ப்பாளனாக ,



**பட்டப்பின் கல்வி டிப்ளோமா கௌரவிப்பு நிகழ்வின் போது...**

ஒரு சமூகத்தொண்டனாக (முன்னாள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமுல்லைக் கிளைத் தலைவர்) இவை எல்லாவற்றிக்கும் மேலாக என்றென்றும் ஆசிரியராக வாழ்ந்தவர். வாழுபவர். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் முழுமனதோடு என்றென்றும் இவர் ஈடுபட்டமையால் இவர் உருவாக்கிய மாணாக்கர் பரம்பரை அவரது பெயரும். புகழும் என்றென்றும் நிலைக்கத் துணைநிற்பர் என்பதில் ஐயமில்லை. அவர் பல்லாண்டுவாழ வாழ்த்துவதுடன் அவர் சேவை நலனையும் பாராட்டி நிற்கின்றோம். இவை திரு க.சரவணபவன் அவர்கள் மீது கொண்ட பற்று. பாசம் .அன்பின்வெளிப்பாடு என்பதனை நாம் உணர்வோம். மிகுந்தவேலைப் பழுவிடையே கிடைத்த சிறிதளவு கால அவகாசத்தைப் பயன்படுத்தி நேரடியாகச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தவர்களை மட்டும் திரட்டி இம் மலரை வெளியிடுகின்றோம். அவரைப் பாராட்டுவதன் மூலம் நாம்பெயர் எடுக்க வேண்டு மென்றோ மற்றவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற மனப்பாங்கோ எள்ளளவும் எம்மிடம் இல்லை. அவர்மீது பாசமும். நேசமும் கொண்ட உங்கள் ஒவ்வொருவர் சார்பாகவும் இன்று இம் மலரை வெயிடுவதில் மகிழ்வடைகின்றோம்.



**விசுவமடு ம.வி. பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக**



**தமிழ் நிகழ்வில் தமிழின் பெருமை எடுத்தியம்புகையில்**

1) **திரு.ச.நாகரத்தினம்.**
பி.க.ப.சிரேஷ்டபோதனாசிரியர்.
2) **திரு.சி.சுந்தரலிங்கம்**
தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியர்
3) **திரு.G.S.பரமேஸ்வரன்**
கோட்டக்கல்விப்பணிப்பாளர் புதுக்குடியிருப்பு.
4) **திரு.நா.தியாகராசா**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
கரைதுறைப்பற்றுக் கோட்டம்.
5) **திரு.சி.ராஜா**
அதிபர் உடையார் கட்டு ம.வி.
6) **திரு.S.அல்வீனுப்பிள்ளை**
அதிபர் மு/வெட்டுவாய்க்கால் அ.த.க பாடசாலை.
7) **திருமதி. கௌ .முருகையா.**
அதிபர் வள்ளிபுனம் க.உ.வி.
8) **செல்வி.சி.சிவானந்தவதனி.**
ஆசிரியர் விசுவமடு ம.வி.
9) **திரு.S.சிவகரன்**
ஆசிரியர்
10) **மலர் அன்பன்**

(சி-9929)

# வாஜ்பாய்–நரேந்திரமோடி மோதல் உச்சக்கட்டத்தில்

# பா.ஜ.க ஆட்சிமன்றக்குழு அவசரமாகக் கூடுகிறது

**பா.ஜ.க.வில் வாஜ்பாய்க்கும், குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கும் ஏற்பட்ட மோதல் உச்சகட்டத்தை அடைந்து உள்ளது. இதை தொடர்ந்து மோடி பதவியில் இருந்து ராஜ்னாமா செய்ய முடி வெடுத்து உள்ளார். இதுபற்றி விவாதிப்பதற்காக பா.ஜ.க. ஆட்சி மன்றக்குழு இன்றும் டில்லியில் அவசரமாக கூடுகிறது.**

மக்களவை தேர்தலில் பா.ஜ. தோல்விக்கு குஜராத் இனக் கலவரம்தான் காரணம். இனக்கலவரம் நடந்ததுமே முதல்வர் மோடியை மாற்றி இருக்க வேண்டும். அதை பா.ஜ. செய்யாதது மாபெரும் தவறு. மும்பையில் 23, 24-ஆம் திகதி நடக்கும் பா.ஜ. தேசிய செயற்குழு கூட்டத்தில் மோடி விவகாரம் பற்றி விவாதிக்கப்படும் என்று வாஜ்பாய்' காட்டாயமாக மணாலியில் பேட்டி அளித்தார்.

அதற்கு பதில் அளித்த அகில இந்திய பா.ஜ. தலைவர் வெங்கையா நாயுடு, பா.ஜ செயற்குழுவில் மோடி விவகாரம் பற்றி விவ்ாதிக்கப்பட மாட்டாது. நான் வாஜ்பாயுடன் டெலிபோனில் பேசி விட்டேன். மோடி விவகாரம் பற்றி நான் அப்படி பேட்டி அளிக்கவில்லை என அவர் கூறுகிறார். எனவே இது முடிந்துபோன பிரச்சினை என்று கூறினார்.

ஆனால், அதன் பிறகு பேட்டி அளித்த வாஜ்பாய், பா.ஜ. தேசிய செயற்குழுவில் மோடி விவகாரம் பற்றி விவாதித்தே தீர வேண்டும் என்று திட்டவட்டமாக கூறினார்.

இதற்கு பதில் அளித்த பா.ஜ. துணைத்தலைவர் விஜயகுமார் மல்கோத்ரா பா.ஜ. தேசிய நிர்வாகக் குழுவில் முதல்வர்கள் மாற்றம் பற்றி விவாதிக்க முடியாது. அது பற்றி ஆட்சி மன்ற குழுவில் தான் விவாதிக்க முடியும் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து அகில இந்திய பா.ஜ. பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் டில்லியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது,

மக்களவைத் தேர்தலில் பா.ஜ. தோல்வி பற்றியும், குஜராத் விவகாரம் பற்றியும் விவாதிக்க பா.ஜ. ஆட்சி மன்றக் குழு டில்லியில் அவசரமாக கூடுகிறது.

வாஜ்பாய், அத்வானி ஆகியோருடன் கலந்து பேசிய பிறகுதான் வெங்கையா நாயுடு ஆட்சி மன்ற குழுவை கூட்டும் முடிவை எடுத்தார். வாஜ்பாயுடன் வெங்கையா நாயுடு டெலிபோனில் பேசியபோது நானும், ஜஸ்வந்த் சிங்கும் அருகில் இருந்தோம் என்றார்.

பா.ஜ.ஆட்சி மன்றக் குழு உயர்ந்த அதிகாரம் படைத்தது. முக்கிய முடிவுகளை அது எடுக்க முடியும்.

ஆட்சி மன்றக்குழுக் கூட்டத்தில் தேர்தல் தோல்விக்கான காரணங்கள் விரிவாக ஆராயப்படும். குஜராத் விவகாரம் பற்றியும் விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

*– மும்பை குண்டுவெடிப்பு சந்தேக நபர்களை –*

# இந்தியாவிற்கு நாடுகடத்த போர்த்துக்கல் நீதிமன்று தடை

மும்பை தொடர் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய நபர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தப் போர்த்துக்கல் உயர் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

மும்பை தொடர் குண்டு வெடிப்பு 1993 இல் நடந்தது. இதனுடன் தொடர்புடைய அபுசலீமையும், மோனிகாபேடியையும் போர்த்துக்கல் நாடு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

இவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு போர்த்துக்கல் உயர் நீதிமன்றம் சில மாதங்களுக்கு முன்னர் அனுமதி அளித்திருந்தது.

ஆனால் இந்த வழக்கில் அபுசலீம் மேன்முறையீடு செய்துள்ள மனுவை விசாரணை செய்த போர்த்துக்கல் உயர் நீதிமன்றம், இந்த நபரை நாடு கடத்தத் தடைவிதித்துள்ளது. அத்துடன் இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து அபுசலீமின் வழக்கு மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதால் அபுசலீமை நாடுகடத்த முடியாது என்று போர்த்துக்கல் அறிவித்துள்ளது.

# பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்பை மீளாய்வு செய்ய இந்தியமத்திய அரசு இணக்கம்

(புதுடில்லி)

பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வை பரிசீலித்து அதனைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் இடதுசாரிகளின் கோரிக்கையினை மத்தியரசு ஒப்புக் கொண்டுள்ளது.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் கூட்டத்திற்கு முன்னர் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்தியரசு இந்த முடிவினை எடுத்துள்ளது.

இந்த கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் அம்பிகா சோனி வளர்ச்சி, மற்றும் நிதிக்கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டு விலை ஏற்றம் குறித்து மறுபரிசீலனை செய்வதற்கு நிதியமைச்சர் சிதம்பரம் உறுதியளித்துள்ளார் என்றும் பிரதமர் மன்மோகன் சிங்கும், சோனியா காந்தியும் கூட்டணிக்கட்சிகளின் யோசனைகளைக் கவனமாகக் கேட்டனர் என்றும், இதன் பின்னர் நிதியமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சரத்பவார்,லல்லு பிரசாத் யாதவ், பஸ்வான், வரதன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# இந்-பாக். அமைச்சுச் செயலாளர் மட்ட பேச்சுக்கள் வரும் 27இல் ஆரம்பம்

இந்திய- பாகிஸ்தான் வெளியுறவுகள் மட்டத்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன. இருநாட்டு வெளியுறவுச் செயலாளர்கள் மட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் 27, மற்றும் 28 ஆம் திகதிகளில் புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கிடையே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே அணுவாயுதங்கள் தொடர்பான பேச்சு வார்த்தைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

நேற்று புதுடில்லியில் ஆரம்பமான இந்தப்பேச்சுவார்த்தைகளில் இரு நாடுகளும் அணுவாயுதங்களைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படவுள்ளன..

இந்திய, பாகிஸ்தான் சமாதான முயற்சிகளுக்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றே இரு நாடுகளும் அணுவாயுதங்களைப் பயன்படுத்துவதில்லை எனும் ஒப்பந்தத்தை மேற்கொள்ள விருப்பது ஆகும்.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தானின் சார்பில் வெளியுறவுத்துறை கூடுதல் செயலர் தாரிக் உஷ்மான் தலைமையில் ஆறு பேர் கொண்ட குழு இந்தியா வந்துள்ளது.

இருநாட்களின் பின்னர் இருநாடுகளும் கூட்டாக அறிக்கை வெளியிடவுள்ளனர்.

நாளை என்ன

நடக்கவுள்ளது?

பார்ப்போம் படிப்போம் பயனடைவோம்

யுனிசெவ் வெண்புறா–வன்னி

(சி-9847)



போர்த்துக்கல்லில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யூரோ-2004 கால்பந்து போட்டித்தொடரின் இறுதிப்போட்டி நடைபெறும் விளையாட்டு அரங்கின் வெளித்தோற்றம். 120 மில்லியன் யூரோக்கள் செலவில் அமைக் கப்பட்ட இவ் அரங்கு 65000 இருக்கைகளைக் கொண்டது. இவ் அரங்கு போத்துக்கல் தலைநகர் லிஸ்பனில் உள்ளது.

## யூரோ -2004 கால்பந்து ஏழாம்நாள் லீக் போட்டி

# கால் இறுதிக்கான வாய்ப்பை பல்கேரியா இழந்தது

# இத்தாலிக்கு நெருக்கடி; டென்மார்க் முன்னணியில்



ஐரோப்பிய கிண்ணத்துக்கான கால பந்து சுற்றுப் போட்டியின் ஏழாம் நாளான நேற்று முன்தினம் டென் மார்க் -பல்கேரியா மற்றும் இத் தாலி-சுவீடன் அணிகளுக்கிடையி லான லீக் போட்டிகள் நடைபெற் றன.

இதில் டென்மார்க் பல்கேரி யாவை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றது. இத்தாலி, சுவீடன் இடையேயான ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடி வடைந்தது.

போத்துக்கல்லின் றாஹா நகரில் நடைபெற்ற போட்டியில் டென் மார்க்கும் பல்கேரியாவும் மோதின.

ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய டென்மார்க் வீரர்கள் முதல் பாதியாட்டம் நிறைவடைய இருந்த கடைசிநிமிடத்தில் கோல் ஒன்றை போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்தினர். பின்னர் ஆட்டத்தின் கடைசி நேரத்தில் மற்றுமொரு கோலை போட்டு 2-0 என்ற கணக்கில் பல் கேரியாவை வீழ்த்தியது.

தனது முதல் போட்டியில் சுவீடனிடம் 5-0 என்ற கோல் எண் ணிக்கையில் ஏற்கனவே தோல்வியுற்ற பல்கேரியா மேற்படி தோல் வியினால் கால் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

இதேவேளை முதல் போட்டியில் இத்தாலியை சமன் செய்த டென் மார்க் கால் இறுதிப்போட்டியில் நுழையும் வாய்ப்பை பிரகாசமாக்கிக் கொண்டது.

இத்தாலி- சுவீடன் அணிகளுக்கிடையிலான போட்டி ஆரம்பம் முதலே பரபரப்பாக இருந்தபோதும் இத்தாலி வீரர்கள் முதலில் கோல் ஒன்றை போட்டு முன்னணியில் திகழ்ந்தனர்.

எனினும் இரண்டாவது பாதியில் சுவீடன் வீரர்கள் அபாரமாக விளை யாடி கோல்ஒன்றை போட்டு இத்தாலி அணியை அதிர்ச்சிக் குள்ளாகிய துடன் தம் நாட்டு ரசிகர்களை மகிழ்ச்சிக்குள் ளாக்கினர்.

இதனால் ஏற்கனவே பல்கேரியாவிற்கு எதிராக 5கோல்கள் போட்டு அதிகபுள்ளிகளைப் பெற்ற சுவீடன் இத்தாலி அணியுடனான போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்ததன் மூலம் இத்தாலி அணி கால்இறுதிக்குள் நுழையும் வாய்ப்பை மங்கிப்போகச்செய்தது.




இதனிடையே அல்பக்ரியா நகரில் வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து கால்பந்தாட்ட ரசிகர்கள் ஆறுபேரைப் போத்துக்கல் பொலிசார் கைது செய்துள்ளனர். இது இவ்வாறிருக்க வன்முறையில் ஈடுபட்ட இங்கிலாந்து ரசிகர் ஒருவருக்கு இரண்டாண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள அதேவேளை அவர்களது சொந்த நாடான இங்கி லாந்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விம்பிள்டன் டென்னிஸ் முத்திரை பதித்த குரோசியாவின் இவானிசேவிச் ஓய்வு பெறுகிறார்

டென்னிஸ் விளையாட்டரங்கில் புகழ் பெற்ற விம்பிள்டன் போட்டி கள் நாளை திங்கட்கிழமை ஆரம் பமாகவுள்ள நிலையில் இப்போட் டியில் இருந்து பல முன்னணி வீரர்கள் விலகியுள்ள நிலையில் டென்னிஸ் ரசிகர்களால் மிகவும் விரும்பப்படும் ஒருவரான கொறான் இவானிசேவிச் இம் முறை போட்டியுடன் டென்னிஸ் விளை யாட்டுக்கு விடைகொடுக்கின்றார்.

குரோசியாவின் கொறான் இவானிசேவிச் தனது டென்னிஸ் வாழ்வில் முத்திரை பதித்தது. விம்பிள்டன் புற்தரைகளில்தான்.

1992 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் அன்ரு அகாஸியிடம் தோல்வியைத் தழுவிய இவானிசேவிச் 1994, 1998 ஆம் ஆண்டுகளில் பீட் சாம்பிராசிடம் தோல்விகண்டார்.

எனினும் சற்றும் எதிர்பாராத வகையில் 2001 ஆம் ஆண்டு போட்டியில் இவானிசேவிச் விம் பிள்டன் சம்பியன் பட்டத்தை வென் றெடுத்து ரசிகர்களை அள வற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.காயம் காரணமாக அண்மைக் காலமாக போட்டிகளில் பங்கேற்காது இருந்த இவர் இறுதித் தடவையாக இம்முறை தான் மிகவும் விரும்பிய விம்பிள்டன் போட்டியில் கலந்துகொள்கிறார்.

# மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஹர்பஜன் சிங்கின் மந்திரப் பந்து வீச்சு

இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், மந்திரப் பந்து வீச்சு' முறை ஒன்றைக் கண்டு பிடித்திருப்பதாகக் கூறி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இதைப்பற்றி இப்போதைக்கு வாய்திறக்கப் போவதில்லை என அறிவித்துள்ள இவர் அதனை இரகசியமாக வைத்திருக்க முடிவுசெய்துள் ளார். அடுத்து நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணப் போட்டியின் போது இந்தப் புதியவகைப் பந்துவீச்சை தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொள்ளும்படி ரசிகர்களுக்கு ஹர்பஜன்சிங் அறிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி யூலை மாதம் சிறிலங்காவில் நடைபெறவுள்ளது. இதற்காக இந்திய அணி வீரர்கள் பெங்களூரில் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் விரல்காயத்தில் இருந்து முழு மையாகக் குணமடைந்துள்ள சுழற் பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங்கும் இடம்பெற்றுள்ளார்.






இவர் கடந்த வியாழனன்று செய்தி யாளர்களிடம் தெரிவித்தபோது; புது வகையான பந்து வீச்சு முறை ஒன் றைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறி வியப்பை ஏற்படுத்தினார்.

இது முற்றிலும் மாறுபட்ட பாணி யில் இருக்கும் இதனை நீண்டநாள் பயிற்சிக்குப் பின்னரே கண்டுபிடித்தேன். எனவே இதைப்பற்றி இதற்கு மேல் எதுவும் சொல்லமாட்டேன். ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது பார்த்துத்தெரிந்துகொள்ளுங்கள் என்றார்.

# மதிப்பும், முக்கியத்துவமும் குறைந்து வருவது தொடர்பில் எதுவித உண்மையும் இல்லை — டெண்டுல்கர்

இந்திய கிரிக்கெட் அணியில் தமது மதிப்பும் முக்கியத்துவமும் குறைந்து வருவதாகக் கூறப்படு வதை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் மறுத்துள்ளார்.



பெங்களூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தியகிரிக்கெட் அணியில் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்க ளுமே உலகத் தரம் வாய்ந்தவர்கள் தான் என்று குறிப்பிட்டார். சமீபகால மாக சில போட்டிகளில் தான் சிறப் பாக விளையாடாததால் அணியில் தமக்கு இருக்கும் மதிப்பும் முக்கியத் துவமும் குறைந்து வருவதாகக் கூறப்படுவது உண்மை அல்ல என்று சச்சின் டெண்டுல்கர் தெளிவுபடுத்தினார்.

தற்போது தான் முழுத்திறனுடன் இருப்பதாகவும் இனிவரும் போட்டிகளில் சிறப்பாக விளையாட இருப்பதாகவும் டெண்டுல்கர் தெரிவித்தார். டெஸ்ட் போட்டிகளில் யுவராஜ் சிங்கை துவக்க ஆட்டக்காரராக களம் இறக்குவது குறித்து அணி நிர்வாகம் முடிவு செய்திருப்பது குறித்துக் கேட்டபோது;

யுவராஜ்சிங் "திறமையான வீரர்தான் என்றபோதிலும் ஆகாஷ் சோப்ராவைக் களம் இறக்குவதுதான் சரியாக இருக்கும் என்று டெண்டுல்கர் குறிப்பிட்டார்.



அந்தரத்தில் மோட்டார் சைக்கிளைப் பாய்ந்து செல்லும்படி ஓட்டி அதிலே அசகாய சூர விளையாட்டுக் களை நடத்திக் காட்டுவதில் வல்லவர் மைக்மெட்ஜர். அமெரிக்காவைச் சேர்ந்த இவர் நேற்று முன்தினம் லொஸ் ஏஞ்சல்சில் உள்ள ஹொலிவூட் வளாகத்தில் ஒரு செய்முறைக் காட்சியை நடத்திக் காட்டினார்.


# கரும்புலிகள் நாளை சிறப்பிக்கும் வகையில் முல்லை நகரில் மாபெரும் விளையாட்டுப்போட்டி

கரும்புலிகள் நாளை முன்னிட்டு முல்லை நகரில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தமிழர் தாயகத்தின் விடிவிற்காகத் தம்உயிரை ஈகம் செய்த கரும்புலிகளை நினைவுகூரும் வகையில் பல்வேறு வகையான பத்துக்கும் மேற்பட்ட விளையாட் டுப்போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்போட்டிகளை முல்லை மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசமும், அதன் சங்கங்களும், கரைதுறைப்பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், முல்லைநகர் புனரமைப்புக் குழு, முல்லைப்பட்டின வர்த்தகர் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் ஆகியன இணைந்து நடத்தவுள்ளன.

இப்போட்டிகள் வரும் இரண்டாம் திகதி ஆரம்பமாகி கரும்புலிகள் தினமான ஐந்தாம் திகதி நிறைவடையவுள்ளது. இவ்வாறு நடைபெறும் பத்துப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. தமிழர் தாயகத்தில் இது வரை காலமும் நடைபெறாத போட்டிக ளான குத்துச்சண்டை, மல்யுத்தம், படகோட்டம், நீச்சல் போன்ற மூன்றுமுக்கிய விளையாட்டுக்களுடன் தலைய ணைச் சண்டை, கயிறிழுத்தல், கபடி, முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டுக்கள், பாடசாலைப் போட் டிகள் போன்ற விள்ளயாட்டுக்களும் இடம் பெறவுள் ளன. இப்போட்டிகளில் குத்துச்சண்டை, மல்யுத் தம், நீச்சல் ஆகியமூன்றுபோட்டிகளில் வெற்றி பெறுபவர்க ளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். (லோ.ச)

## சிந்தனைக்கு



ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை, ஒரு உன்னதமான - மேன்மையான- சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-06-2004
மின் அஞ்சல்
தொலைபேசி 060-2213244 Daily@ eezhanatham. com
தொலைநகல் 021-2283948 natham 23ela@yahoo. com

# இரட்டைவேடம்

சிறிலங்கா அரசிற்கும் -விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் நீடித்துச் செல்லவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படவும், முதல் பணியாக சிறிலங்கா அரசாங்கம் தனது இரட்டைவேட அணுகு முறையைக் கைவிடவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், யுத்த நிறுத்தமும், சமாதானமும் கேள்விக்குள்ளாவது தவிர்க்கமுடியாது போய்விடும்.

ஒருபுறத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், யுத்த நிறுத்தத்திற்கும் ஆதரவான/ அனுசரணையான கருத்துக்களைத் தெரிவித்து வருபவர்களாக இருக்கும் வேளையில், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் சாமாதான முயற்சிகளுக்குக் குந்தகமும், யுத்த நிறுத்தத்திற்கு பாதிப்பையும் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாட்டைக் கொண்டவையாகவுமுள்ளன. ஆகையால் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி தவிர்க்கமுடியாது எழுகின்றது.

எடுத்துக்காட்டாக சிறிலங்கா வானொலி ஊடாக அண்மைக்காலத்தில் ஒலிபரப்பப்பட்டு வரும் சில வானொலிச் சேவைகளும், சிறிலங்கா வானொலி வெளியிடும் உண்மைக்குப் புறம்பான செய்திகளும் புலிகளுக்கெதிரான பிரச்சாரங்களும் சமாதானத்துக்கோ, யுத்த நிறுத்தத்திற்கோ அனுசரணையானவையாக இல்லை.

குறிப்பாக சிறிலங்கா வானொலி ஊடாக ஒலிபரப்பப்படும் லண்டனிலிருந்து இயங்கும் ரி.பி.சி வானொலிச் சேவைதமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை விளைவித்து, சமாதானத்திற்கும் யுத்தநிறுத்தத்திற்கும் பாதிப்பை விளைவிக்கக் கூடியதாகவுள்ளது. அத்தோடு, புலிகள் விரோதப் போக்குக் கொண்டவையாகவுமே உள்ளன. அடுத்ததாக சிறிலங்கா வானொலி தனது செய்தி அறிக்கைகளில் விடுதலைப்புலிகளுக்கிடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளதாகவும் மோதல் நிலை உருவாகியுள்ளதாகவும் கூறுகின்றமை உண்மைக்குப் புறம்பானவை மட்டுமல்ல, மக்களைக் குழப்பத்திற்கு உட்படுத்துபவையுமாகும்.

இவற்றின் விளைவாகவே, அண்மையில் தம்மைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்திய நோர்வேயின் கொழும்பிற்கானதூதுவரிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ்விடயம் குறித்துப் பிரஸ்தாபிக்க வேண்டிவந்தது. இத்தகைய நடவடிக்கையானது சமாதானதிற்கு ஆரோக்கியமானதல்ல.

ஆனால், விடுதலைப்புலிகளின் இக்குற்றச்சாட்டை அடுத்து அரசாங்கத் தரப்பினர் தெரிவித்துள்ள பதில்கள் பொறுப்பற்றதனமானதாகவும், உண்மைகளை மறைப்பவையாகவுமே உள்ளன. குறிப்பாக வெளிநாட்டில் இயங்கும் வானொலி நிகழ்ச்சியை தமதுசேவையூடாக ஒலிபரப்புச் செய்வதை ஒப்புக் கொண்டிருப்பினும், புலிகளை அவதூறு செய்வதான விடயம் பரிசீலித்துப் பார்த்த பின்பே கூற முடியும் எனத் தெரிவித்துள்ளமை சிறுபிள்ளைத் தனமானது.

ஏனெனில், ஒரு வானொலி யாரால் இயக்கப்படுகின்றது. ஏன் இயக்கப்படுகின்றது என்ற நோக்கம் அறியாது அனுமதி வழங்கப்பட்டது போன்று ஓர் ஊடகத்துறை பிரதி அமைச்சர் பேசுவதைச் சிறுபிள்ளைத்தனம் எனக் கூறாது வேறு எவ்வாறு கூற முடியும்.

அடுத்ததாகச் சிறிலங்கா வானொலி மேற்கொள்ளும் புலிகளுக்கு எதிரான அறிவிப்புக்கள்/ செய்திகள் தொடர்பாக சிறிலங்கா அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளர்,மங்களசமரவீர இத்தகவல்கள் வானொலிக்குக் கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையிலேயே ஒலிபரப்பாவதாகவும் அதற்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் கூறுவது பொறுப்பற்றதனமான பேச்சாகும்.

ஏனெனில், அரச வானொலி ஒன்று உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிடுகின்றதெனில், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர் அதற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரே. அதற்கும் மேலாக வானொலிச் செய்தியானது நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் அளவிற்கு முக்கியத்துவம் மிக்கதாயின் அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது அரசாங்கமே. இதனை வானொலியின் தன்னிச்சையான செயற்பாடு எனக் கூறுவதற்குஅது ஒரு சுயாதீனமான தகவல் ஊடகம் அல்ல.

ஆகையினால், ஆட்சியாளர்கள் உண்மையிலேயே சமாதானத்தின் மீது பற்றுறுதியோ / விருப்போ கொண்டவர்களாயின் இரட்டைத்தனமான அணுகு முறையைக் கைவிட வேண்டும். சமாதானம் நோக்கிய பயணத்தில் சவால்களையும், நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டி இருக்கும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. ஆனால், அதில் வெற்றி பெறுவதானால், சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டிருத்தல் வேண்டும். இரட்டைவேடம் கொண்ட அணுகுமுறை இதற்குப் பயன்தரமாட்டாது.

# இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பில் ரஷ்யா ஆதரவு வழங்கும்

## -கதிர்காமருடனான பேச்சில் உறுதிவழங்கப்படும்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கும் முயற்சிகளுக்கும், பயங் கரவாதம் தீவிரவாதம் ஆகிய அச்சுறுத்தல்களை எதிர்த்து எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்குவதென்று ரஷ்யா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று மொஸ்கோவிற்கான ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் இந்த விஜயத்தின்போது ரஷ்யா இந்த உறுதிமொழியை வழங்குமென்று கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது. அத்துடன் இரு நாடுகளுக்குமிடைலான சகல விவகாரங்கள் குறித்தும் ரஷ்யா கவனமாக ஆராயுமென்றும் கொழும்பிலுள்ள ரஷ்யதூதரகம் தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ரஷ்ய அதிகாரிகளும் வர்த்தக பொருளாதார கல்வித்துறைகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது பற்றியும் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பரஸ்பர வர்த்தகத்தில் சமபங்கினைப் பேணுவதுகுறித்தும் தெற்காசியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் உட்பட முக்கிய சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் விரிவாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழரின் உரிமைக்காகவே மாகாணசபைத் தேர்தலில் போட்டி

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

மேல்மாகாணதமிழ் வாக்காளர்களின் உரிமைகளுக்காகவே மேல்மாகாண மக்கள் முன்னணி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறது என அதன் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் முன்னணி வேட்பாளர்களிடையே உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

"மேல்மாகாணத்தின் முழு வாக்காளர்களிலும் சுமார் ஐந்து வீத வாக்காளர்களான தமிழர்களுக்கு நிலவுடமை ,இருப்பிட, கல்வி வசதிகள் பற்றாக்குறை,ஜீவனத்திற்காக சம்பாதித்தலில் கஷ்ரங்கள் இறப்பு பிறப்பு பதிவுச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் உள்ளன.

எமதுவேட்பாளர்கள் தேர்தலில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இவ்விடயங்கள் வலியுறுத்தப்படும் எதிர்காலத்தில் அரசியல் அழுத்தம் மூலம் அரசிற்கு இடித்துரைக்கப்படும்" என்றும் மனோகணேசன் கூறியுள்ளார்.

முன்னணியின் பிரதித் தலைவர் குமர குருபரனும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்.

# மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் நாட்டிற்கு எவ்வித நன்மையும் இல்லை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதனால் எவ்விதமான நன்மையும் இலங்கையில் ஏற்படாதென தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸாநாயக்க தெரிவித்துள்ளார்.ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இத் தேர்தலினால் செலவு மட்டுமேயொழிய பிரயோசனமற்றதென தெரிவித்துள்ளார். கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் திணைக்களத்திற்குத் தனிப்பட்ட ரீதியாக 13 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவு ஏற்பட்டது. ஆனால் அரசு உரிய நிதியை தராமையால் மிகவும் கஸ்ரப்பட்டு எமது கடமையைச் செய்தோம். பொது தேர்தலாயின் நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் மாகாணசபைத் தேர்தல் பிரயோசனமற்று அரசியல் அமைப்பின் அடிப்படையில் இதனை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தேர்தல் 20 ஆம் திகதியளவில் சூடுபிடிக்கு மெனவும் தெரிவித்துள்ளார். (32)

# கொத்மலை மின்திட்டம் செயற்படின் இயற்கை நீர் வீழ்ச்சிகள் அழிக்கப்படும்

## சிறில. மத்தியசுற்றாடல் அமைப்பு தெரிவிப்பு

அரசாங்கம் உத்தேசித்துள்ள கொத்மலை நீர் மின்வலுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் இயற்கை நீர் வீழ்ச்சிகள் அழிக்கப்படுமென மத்திய சுற்றாடல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென மின் சக்தி அமைச்சர் சுசில் பிறேமஜயந்த உறுதியாகவுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்குத் தாம் இந்தத் திட்டம் தொடர்பான பிரேரணையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க உள்ளதாக சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார். இந்த திட்டம் நடைமுறைப் படுத்தஉள்ளதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்துப் பலரும் கருத்து தெரிவித்துள்ள நிலையில் அரசாங்கம் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தத் தீவிரம் காட்டிவருவதாக மலையக அரசியல் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலமாக வருடம் ஒன்றுக்கு 530 மெகாவோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். என எதிர்பார்க்கப்படுகிறது. (32)


-மாகாணசபைத் தேர்தல் களம்-

# தேர்தல் சட்டங்களையும் மீறிய 300பேர் இதுவரை கைது

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், யூலை மாதம் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தல் சட்டங் களை மீறியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுக்களின் பேரில் சுமார் 300பேரை பொலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகத்தின் பணிப் பாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரி வித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் தொடர் பான 96 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இதன்போது சந்தேக நபர்கள் பயன்படுத்திய 20 வாகனங்கள் கைப் பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. தேர்தல் சட்ட திட்டங்களை மீறும்வகையில் பயன்படுத்தப்படுகின்ற வாக னங்கள் என்று கண்டு பிடிக்கப்படுகின்ற பட்சத்தில் எந்த வொரு அரச, தனியார் வாகனத் தையும் பொலிசார் கைப்பற்றுவர் எனவும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.




## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

3.5 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் பிரதான உணவின் மூலமாகக் கடலையே நம்பியுள்ளனர். இன்னும் இருபது வருடங்களில் இந்த எண்ணிக்கை 7 பில்லியனாக இரட்டிக்கும்.

# யுத்த,போக்குவரத்து விமானங்கள் இரண்டு மாதங்களுக்குள் கொள்வனவு

## சிறில.விமானப்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் விமானப் படைக்குப் புதிதாக யுத்த விமானங்களும், போக்குவரத்து விமானங்களும் கொள்வனவு செய்யப் படவிருப்பதாகவும் இரண்டு மாதங்களுக்குள் இவற்றைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் சிறிலங்காவின் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமானத்தளம் மீது சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தாக்குதலின் போது சேதமடைந்த மூன்று கே-8 ஜெட் விமானங்களுக்குப் பதிலாக மூன்று புதிய விமானங்களும் பயன்படுத்தப்படும் என்றும் விமானப்படைத்தளபதி ஏயர் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று தியத்தலாவை விமானப்படை முகாமில் செய்தியாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இரண்டு மாதங்களுக்குள் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதென்றும் கூறியுள்ளதுடன்,

இப்போது விமானப்படையிடம் யுத்தவிமானங்கள் போதியதாக இல்லை. விமானப்படையிடம் உள்ள யுத்த விமானங்களில் 60 சதவீதமானவை மட்டும் எவ் வேளையிலும் செயற்படக் கூடியதாக உள்ளன. இதேவேளை 2 போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வதற்கும் அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தென்மராட்சியில் வீடுகளைக் கையளிப்பதாக

# படையினர் வழங்கிய உறுதி மொழி நிறைவேற்றப்படுமா எனச்சந்தேகம்

(தென்மராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள வீடுகளை விடுவிப்பதாக இராணுவத் தரப்பில் கூறப்பட்ட உறுதி மொழியும் பின்னர் இராணுவத்தினரின் நடத்தையும் மக்கள் மனங்களில் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

தென்மராட்சியில் எழுதுமட்டுவாள்,கரம்பகம்,உசன், விடத்தல்பளை, மிருசுவில் பகுதிகளில் பொது மக்களின் வீடுகளை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து வெளியேறி வீடுகள் மக்களிடம் கையளிக்கப்படும் என கடந்த பத்து நாட்களுக்கு முன் படைத்தரப்பு அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டது.

ஆயினும் கரம்பகம் பகுதியைச் சேர்ந்த 40குடும்பங்களுக்கே வீடுகளை இராணுவம் காட்டியுள்ளது.

நேற்றுக் காலை கிராம அலுவலர் ந.ராஜலிங்கம் தலைமையில் கரம்பகம் கிராமத்தைச் சேர்ந்த 40 கும்பங்களிலும் தலா ஒருவராக 40 பேரை ரிரக்குகளில் ஏற்றிச் சென்று வீடுகளை இராணுவம் காண்பித்துள்ளது. இக்கிராமத்தில் 170வது குடும்பங்கள் வசித்து வந்த நிலையில் இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே மக்களால் கருதப்படுகின்றது.

மேலும் எழுது மட்டுவாள் வடக்கு,உசன்,விடத்தல்பளை, மிருசுவில் ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளைப் பார்ப்பதற்குக் கூட படையினர் தடைவிதித்துள்ளனர். இதனால் குறித்த பகுதிகளைச் சேர்ந்தமக்கள்விசனம் அடைந்துள்ளதுடன் மேற்படி அதிகாரியின் உறுதிமொழி எந்த அளவிற்கு நடைமுறைச் சாத்தியமாகுமென பலத்த சந்தேகத்தையும் எழுப்பியுள்ளனர். (28)

# ஊவா மாகாணசபைத் தேர்தலை வேடுவ இனத்தவர் புறக்கணிப்பு

ஊவாமாகாணம் பதுளையில் வசிக்கும் வேடுவ இனத்தவர் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசியல்வாதிகள் தமது உரிமைகளை வழங்க மறுத்து வருவதாலும் அண்மையில் பொலிஸ் நிலையமொன்றில் தமது வேடுவ மொழியைப் பேசியதற்காக தம் மீது தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எதுவும் எடுக்காமையாலும் தாம் அதிருப்தி கொண்டே தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும் அவ் இனத்தின் தலைவர் வன்னிலக்டோ தெரிவித்தார். இவ்வினத்தைச் சேர்ந்தோரில் 3000இற்கு மேற்பட்டோர் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர். (32)

## இராணுவத்தினின்...

அண்மையில் மட்டக்களப்பு நகரத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் கொலை மற்றும் ஏனைய புத்திஜீவிகள் கொல்லப்பட்டமை இராணுவத்தினருடைய பதுங்குத் தாக்குதல்கள் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அனைத்தும் இராணுவத்திற்குத் தெரியாமல் நடக்கவில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இவை அனைத்தும் இராணுவத்தினருடைய உதவியுடன் தான் நடந்திருந்திருக்கிறது என்பதை அவருக்கு ஆணித்தரமாக விளங்கப்படுத்தியுள்ளோம்.

அவர் எங்களுக்குக் கூறியிருந்தார் இனிச் சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்குத்தான் சனாதிபதி தன்னை நியமித்திருப்பதாகவும் இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காதெனவும் கூறியிருந்தார்.

இதன்பின்னர் மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் அண்மையில் இராணுவத்தரப்பினருடன் நடந்த கலந்துரையாடலின் போது அதில் இப்படியான சம்பவம் உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்திக் கூறியிருந்தோம்.

அப்போது நாங்களும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கூறியிருந்தார்கள்.இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் எமது கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க நாங்கள் எவ்வகையில் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டிருந்தோம். நாங்கள் சில அணிகளையும் ஒழுங்குபடுத்தி இருக்கின்றோம். இரகசியமாகச் சில நகர்வுகளும் சில செயற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கிறது.

விரைவிலேயே நாங்கள் அந்தப் பிரச்சினையை முற்றுமுழுதாக இனங்கண்டு மக்கள் மத்தியிலே,யாரால் செய்யப்பட்டது என்பதை இனங்கண்டு சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

அண்மையில் விரிவுரையாளர் கொலை, பத்திரிகையாளர் நடேசன் கொல்லப்பட்டமை தெரிந்ததே. இவர்கள் எமது தேசியப் போராட்டத்திற்குச் சார்பாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தவர்கள்.

இதனால் இவர்களுக்குப் பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக்கொலைகள் இராணுவத்தினருடைய உதவியுடன்தான் நடைபெற்றுள்ளதென்பதை நாங்கள் சில தடயங்கள் மூலம் அறிந்துள்ளோம் என்றார்.

இதேவேளை இராணுவப் பகுதிகளுக்கு அப்பால் எமது பகுதியிலும் சில குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றின் பின்னணிகளை நாங்கள் தற்பொழுது ஓரளவு அறிந்துள்ளோம். விரைவில் இதற்கொரு முற்றுப்புள்ளி வைப்பதற்கான செயற்பாடுகளும் திட்டங்களும் எம்மிடம் இருக்கிறது. அதனை நாங்கள் செயற்படுத்துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வர்த்தகர்...

சக்கோட்டை இராணுவ முகாம்பொறுப்பதிகாரியினால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகியதையடுத்து குறித்த வர்த்தகரைத் தமது முகாமிற்கு நேற்று அழைத்த படைஉயர் அதிகாரிகள் அவ்வாறான சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றிருக்கவில்லையென கூறும் கடிதம் ஒன்றைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளனர்.

எனினும் குறித்த படையதிகாரியால் எதிர்வரும் காலங்களில் தனது உயிருக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லையென உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றைப் படைத்தலைமை தந்தாலே இக் கடிதத்தினைத் தரமுடியும் எனக் கூறியுள்ளார்.

இதனால் கோபமுற்ற படையதிகாரிகள் அவ் வர்த்தகரைத் திருப்பி அனுப்பிய பின்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று குறித்த மீனவர் சம்பவ தினத்தில் தன்னைத் தாக்கியதாக முறைப்பாடொன்றைச் செய்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த வர்த்தகரை பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிசார், அவரிடமிருந்து சம்பவம் தொடர்பான வாக்குமூலங்களைப் பதிவுசெய்துள்ளனர். (27)

# அகதிகள் தினம் குறித்து யு.என்.எச்.சி.ஆர் விசேட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

இன்று நடைபெறவுள்ள சர்வதேச அகதிகள் தினம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் பல செயற்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அகதிமுகாங்களில் இது தொடர்பான விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின்அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தோரில் 6 இலட்சத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டுப்பேர் கடந்த 2வருட காலப்பகுதியில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மேலும் 4 இலட்சம் பேர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் உள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (32)

### -உயர்தரப் பரீட்சையில் தோற்றியோருக்கு

# கிளி.தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் கணினிக் கற்கை நெறி ஆரம்பம்

(கிளிநொச்சி)

2004 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் தோற்றி பெறுபேறுகளிற்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்காக கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தின் கணினி கற்கைநெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக் கணினி கற்கைநெறிக்கு (MS.OFFICE) விண்ணப்பிக்கலாம் எனவும் விண்ணப்பப் படிவங்களை கிளி/தொழில்நுட்பக் கல்விநிறுவனத்தின் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30.06.2004. இற்கு முன்னர் கிடைக்குமாறு தபால் மூலமாக, அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் தி.பிரபாகரன் கேட்டுக் கொண்டுள்ளார். (15)

## உலக...

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினைச் சென்றடைந்து அங்கு கருத்துரைகள் இடம்பெறவுள்ளது.அதனைத் தொடர்ந்து சிறிலங்கா அரசிற்கும் மற்றும் ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்திற்குமான மகஜர் கையளிப்பும் இடம் பெறவுள்ளது. எனவே அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் இடம்பெயர்ந்து வாழும் மக்களையும் இவ்எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சிமாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் வேண்டுகைவிடுத்துள்ளனர்.(சோ.கு)

# வருடாந்த உற்சவம்

வட்டக்கச்சி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவமானது வரும் 23ஆம்திகதி அடுத்தமாதம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 01ஆம் திகதி தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (12)

## கொழும்பில்....

வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படும் கிளைமோர் கண்ணிவெடிகள் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கலாம் எனவும் தாம் கருதுவதாகவும் அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் சிறிலங்கா காவல் துறையினர் ஈடுபட்டுள்ளதாகவும்தெரிவித்துள்ளார். (32)

## கல்நெரிக்கும்...

சம்பவம் இடம்பெற்றுள்ள தாகத் தெரியவருகிறது.இச்சம்பவத்தின்போது சரவணபவான் (வயது-58) என்றகுடும்பஸ்தரே காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மூதூரில்...

எதாகவும் ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் மேதானந்த தேரர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக நாடு முழுவதும் பாதயாத்திரையை நடத்தவுள்ளதாகவும் இதில் முதலில் மூதூரிலிருந்து கொழும்பிற்கு எதிர்வரும் 28ஆம் திகதி பாதயாத்திரை நடத்தவுள்ளதாகவும் மேதானந்ததேரர் மேலும் தெரிவித்துள்ளார்.இதேவேளை எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கம் தமக்கு இல்லையென்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்குத் தமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (32)

## நிறுத்தி...

யெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். வழமைபோல தொழிலை முடித்தபின்னர் படகுகளை நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட மீனவர் சங்கக்கட்டடத்தின் அருகில் இந்தப் படகும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீவைப்புச் தொடர்பாகச் சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஒந்தாச்சி மடத்திலுள்ள சுகாதார சிகிச்சை நிலையம் ஒன்றும் தீயில் எரிந்து முற்றாக அழிந்துள்ளது.

இந்தத் தீ பற்றிய காரணம் எதுவும் தெரியவில்லையெனப் பொலிசார் கூறுகின்றனர்.

## படையினரின்...

ஈடுபட்டு வந்திருந்தனர்.இதுதொடர்பாக மேலும் தெரிய வருகையில் பலாலிப்படைத்தளத்தின் கிழக்குப்புறமாக உள்ள உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த சில வாரங்களாக பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவ் வேளையில் துப்பாக்கிப்பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதியும் தொண்டமனாறு கடல்நீரேரியின் "அக்கரை" கடற்கரைப்பகுதியை அண்டியுள்ளது.எனினும் தாங்கள் மீன்பிடித் தொழிலுக்கென குறித்த கடற்பரப்பிற்கு செல்கின்ற வேளையிலேயே படையினர் மீனவர்கள் மீது திட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு வருவதாக தொண்டமனாறு மீனவசங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனிடையே நேற்றுவெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகப்பகுதியிலுள்ள 52-ப்படைத்தளத்தில் இடம்பெற்ற மீனவசங்க பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் இச்சம்பவம் தொடர்பாக படை உயரதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அவ்வேளையில் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும்ஆஜராகிஇருந்தனர். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.